



உ

*சிவமயம்*

**ஆத்மஜோதி**

*தாபிதம்: 1948*

ARTHMA JOTHY
Est. 1948
ISSN 1703-9185

மலர் 6: இதழ் 3
விய வருடம்
*ஆடி - புரட்டாதி*
*திருவள்ளுவர் ஆண்டு*
*2036*



**கௌரவ ஆசிரியர்**
பேரறிஞர்
முருகவே பரமநாதன்

**பிரதம ஆசிரியர்**
திரு. வி. கந்தவனம்

**ஆசிரியர் குழு**
திரு. செ. சோமசுந்தரம்
திரு. சிவ. முத்துலிங்கம்

**எழுத்தமைப்பு**
திரு. மா. கனகசபாபதி

**அச்சுப் பதிப்பு**
விவேகா அச்சகம்



**வெளியீடு**
ஆத்மஜோதி
தியான நிலையம்
பதிவு இல: 1476651



**தொடர்பு முகவரி**
Siva Muthulingam
217 Morningside Ave.
Apt. 912
Toronto, ON. M1E 3E4
Tel: (416) 724-6240
www.arthmajothy.org


## உள்ளடக்கம்


1. ஆசிரியர் தலையங்கம்
2. பேரூராதீனம்
3. திருமுறை மாநாடு
4. எமது முதுசொம்களைப்
5. பாதுகாப்போம் நாயன்மார்கள்
6. தேன் நீக்கும் நோய்கள்
7. சத்தியசாயி பாபாவின் அருள்மொழிகள்
8. இந்திய திருத்தல யாத்திரை
9. அடியார் உறவு
10. கடிதங்கள்
11. தருமம்
12. ஒல்லாந்து யாத்திரை
13. போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்
14. St.Thirunavukarasar
15. இந்து சமயப் பேரவைச் செய்திகள்
16. மணிவிழாக்கள்
17. ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை




# தவத்தின் வலிமை

தவத்தின் வலிமையை நேரடியாகவே கண்டுகொள்ளும் வாய்ப்பு அண்மையிற் கிடைத்தது.

ஒன்ராறியோ இந்துசமயப் பேரவை நடத்திய திருமுறை மாநாட்டைச் சிறப்பிக்க கோவை பேரூர் ஆதீன முதல்வர் கயிலைக் குருமணி தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் வருகை தந்திருந்தார். வருவதற்கு முன்னதாக இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளிற் பல சமய நிகழ்ச்சிகளிற் பங்குபற்றி விட்டு 26-07-2006 இரவு ரொறன்ரோவில் வந்திறங்கினார். பயணக் களைப்பையும் பாராது வழியிலே தமிழ்த் தொலைக்காட்சியில் (TVi) நேர்காணல் நிகழ்வொன்றிற் பங்குபற்றினார்.

அடுத்தநாள் காலை 10 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் பலருக்குத் தீட்சை வழங்கினார். தீட்சை கேட்டவர்களில் ஒருவர் டாக்டர் அ. சண்முகவடிவேல் அவர்கள்.

அவர் பெரியவரை மதிய உணவுக்கு அழைத்துச் சென்றார். அன்று மாலை கனடா சைவசித்தாந்த மன்றம் மிசிசாகாவில் ஒழுங்கு செய்த கூட்டத்தில் உரை நிகழ்த்தினார். பின்னர் மன்றத் தலைவர் ஆசிரியர் தி. விசுவலிங்கம் அவர்களது இல்லத்தில் நடந்த விருந்துபசார நிகழ்வில் பங்குபற்றிவிட்டு ஸ்காபரோவில் அவர் தங்கியிருந்த இல்லத்துக்குத் திரும்ப இரவு 12:30 மணி ஆகிவிட்டது.

அடுத்தநாள் காலை உடல்நலமற்று கிரேஸ் மருத்துவமனையில் இருந்த இந்துசமயப் பேரவைச் செயலாளர் திருமுறைச் செல்வர் திரு. சிவ. முத்துலிங்கத்தைப் பார்த்துத் திருநீறு வழங்கி நலம்பெற அருள்மொழி கூறிப் பொன்னாடை போர்த்தினார். பின்னர் பேரவையின் பொருளாளர் ஆசிரியர் திரு. செ. சோமசுந்தரம் தமது இல்லத்தில் வழங்கிய விருந்துபசாரத்தில் பங்குபற்றிக் கொண்டு வீடு திரும்பப் பிற்பகல் 2:30 ஆகிவிட்டது.

மாலை நல்லூர் கந்தசுவாமி கோயிலில் திருமுறை மாநாடு தொடக்கம். மாலை 5:00 மணிக்கெல்லாம் அங்கு வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்துவிட்டார். மாநாட்டைத் தொடக்கி வைத்துச் சிங்கக் குரலில் தங்கத்தமிழ் மறையைக் குழைத்து 45 நிமிடம்வரை மழைமுகிலாகப் பொழிந்தார்.

அடுத்தநாள் அதிகாலையில் எழுந்து போட்டிகளிற் பங்குபற்றிய பிள்ளைகளுக்கான சான்றிதழ்கள் இருநூறில் ஒப்பமிட்டார். பின்னர் கனடாக் கந்தசுவாமி கோயிலில் மாநாட்டின் இரண்டாவது நாள் காலை நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்கிச் சிறப்புற நடத்தினார். மாலையிலும் அருளுரை வழங்கினார். போட்டிகளில் பரிசுபெற்ற பிள்ளைகளுக்கும் பங்குபற்றிய பிள்ளைகளுக்கும் திருநீறு வழங்கி ஆசீர்வதித்தார்.

மறுநாள் 30-07-2006 சனிக்கிழமை அதிகாலையில் எஞ்சிய போட்டிச் சான்றிதழ்களுக்கும் 2000ம் ஆண்டிலிருந்து திருமுறை முற்றோதலிற் பங்குபற்றிவந்த அடியார்களுக்கு வழங்கப்படவுள்ள சிறப்புச்சான்றிதழ்களுக்கும் ஒப்பமிட்டார். இரு நாட்களும் மொத்தமாக 415 சான்றிதழ்களுக்குக் கையெழுத்திட்டிருக்கின்றார்.

சனிக்கிழமை மாநாடு செல்வமலைப் பிள்ளையார் ஆலயத்தில் (இறிச்மண்ட் கில் இந்து ஆலயத்தில்) நடந்தது. காலை நிகழ்ச்சிகளுக்குத் தலைவர் அவரே. நீண்டதொரு தலைமையுரையும் பின்னர் சான்றிதழ்கள் வழங்கிய பின்னர் மற்றுமொரு சிறப்புரையும் நிகழ்த்தினார். அன்று மாலையில் அவர் ஊருக்குப் பயணம். ஆடிச் சுவாதி சுந்தரமூர்த்தி நாயனார் கயிலை சென்ற திருநாள். எங்கிருந்தாலும் அந்தநாட் பூசையைப் பெரியவர் தவறவிடுவதில்லை. பூசையை நடத்துபவரும் அவர்தான்.

இத்தனைக்கும் இவருக்கு வயது 82. எந்தவித நோயும் கிடையாது. சோர்வு, களைப்பு என்று எதுவுமே கிடையா.

மிகுந்த சுறுசுறுப்புடன் ஓடியாடியும் உலகம் சுற்றியும் சைவம் தழைக்கவும், தமிழ்நெறி ஓங்கவும் தொண்டாற்றும் கயிலைக் குருமணியின் ஒழுக்கத்தின் விழுப்பம், உள்ளத்தின் உயர்வு, தவத்தின் வலிமை, சிவப்பணியின் செம்மை ஆகிய வற்றுக்குப் பின்னாலும் முன்னாலும் இருக்கும் எல்லாம் வல்ல திருவருளை நினைந்து இவர் நீடூழி வாழ வாழ்த்தி வணங்குகின்றோம்.




# பேரூராதீன வரலாறு

அணிகாஞ்சிவாய் பேரூர், பிறவாநெறி எனத் திருமுறைகள் போற்றும் கொங்குப் புண்ணியத்தலம் பேரூர் ஆகும். இங்கு பதினேழாம் நூற்றாண்டில் தவம் புரிந்து அருளாட்சி செய்து திருக்கயிலாயப்பரம்பரை குருமரபில் திருமடத்தைத் தோற்று வித்தவர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் ஆவார்.

சீலத்தவர் போற்றும் இத்திருமடத்தில் அவரது அருள்நிழலில் இருந்து மாணவர்கள் அருட்கல்வி கற்றுள்ளனர். அம்பிகையையும், பெருமானையும் கண்ணினால் கண்டு திருவருள் பெற்றவர் சாந்தலிங்கர். உயிர்க்கொலை தவிர்த்து அருளிரக்கம் போற்றும் கொலைமறுத்தல், வைராக்கியசதகம், வைராக்கியதீபம், சமய ஒருமைப்பாடு போற்றும் அவிரோத உந்தியார் என நான்கு நூல்களை அருளினார். மாசி மகம் நாளன்று சீவ சமாதி அடைந்தார். அது முதல் அவர்தம் திருவடி போற்றும் வாழையடி வாழையாம் திருக்கூட்டத்திருமரபு பேரூராதினத்திற்குப் பெருமை சேர்த்து வருகிறது.

அத்திருமரபில் மாணிக்க அடிகள், ஆறுமுக அடிகள் அவர்களின் அடியொற்றிக் கயிலைக்குருமணி சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் பேரூராதீன அருளாட்சிப் பொறுப்பேற்று சைவமும் தமிழும் தழைத்தோங்க அல்லும் பகலும் அருட்பணியாற்றி வருகின்றார்கள்.

## தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்



திருக்கயிலாயப் பரம்பரை மெய்கண்ட சந்தானம் பேரூராதீனம் கயிலைக்குருமணி சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடி களார் 15 வயதிலேயே சமயத் துறையில் நுழைந்தார். மயிலம் ஆதீனத் தமிழ்க் கல்லூரியில் வித்துவான் பட்டத்திற்குப் பயிலும்போதே பேரூராதீன அருளாட்சிப் பொறுப்பேற்றார்.

பேரூரில் தமிழ்க்கல்லூரி, கல்வி நிறுவனங்களை 50 ஆண்டுகளுக்கு மேலாக நடத்தி வருகிறார்கள். தற்போது சுமார் 3000 மாணவர்கள் பயின்றுவருகிறார்கள். இவருடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டுதலால் திருநெறிய தமிழால் 5000த்திற்கும் மேற்பட்ட குடமுழுக்குகள் நடத்தப்பட்டுள்ளன. இவர் நூற்றுக்கணக்கான திருக்கோயில் திருப்பணிகள் செய்துள்ளார். அவற்றுள் பல பெரிய சிவாலயங்களும் அடங்கும்.

ஆண்டுதோறும் மலைவாழ் மக்களுக்கு உணவு, உடை, மருத்துவ வசதி அளித்து வருகிறார். ஏழைகளுக்காக இலவச மருந்து, ஆலோசனை புதன்கிழமை பேரூரிலும், வியாழக்கிழமை ஊட்டியிலும் நடைபெற்று வருகிறது. தாழ்த்தப்பட்டோருக்கு வழிபாட்டுரிமை, எல்லா நிலைகளிலும் தீண்டாமையை நீக்குதல் என்பவற்றை வலியுறுத்தி வருகின்றார்.

உலகின் பெரும்பாலான நாடுகளுக்குச் சென்று சைவத தமிழ்ப்பணியாற்றி வருகிறார். 10 உலக சமய மாநாடுகளிலும் பல உலகத் தமிழ் மாநாடுகளிலும் பங்கேற்றுள்ளார்.

சென்னை பல்கலைக்கழக ஆட்சிக்குழு (Syndicate) ஆட்சிப் பேரவை (Senate), பாடத்திட்டக் குழுக்களில் பங்கேற்றுள்ளார்.

தமிழக இந்து சமய அறநிலைத் துறையில் பல்வேறு குழுக்களில் பங்கேற்றுள்ளார். உலக இந்துப் பேரவைத் துறவியர் பிரிவின் செயற்குழு உறுப்பினராக உள்ளார். தமிழக இந்து துறவியர் பேரவையின் தலைவராக உள்ளார். ஆச்சாரிய சபாவின் கேரள, தமிழ்நாடு ஒருங்கிணைப்பாளராக உள்ளார். பல கும்பமேளாக்களிலும், தேசிய துறவியர் பேரவைக் கூட்டங்களிலும் பங்கேற்றுள்ளார். திருக்கயிலாயம், கேதாரம், அமரநாத் உள்ளிட்ட பெரும்பாலான சிவத்தலங்களுக்குச் சென்று வந்துள்ளார். உலக சைவப் பேரவையின் புரவலராக உள்ளார். 90 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்றுவரும் சத்வித்யா சன்மார்க்க சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றுகின்றார்.

இவரது பணிகளைச் சிறப்பிக்கும் வகையில் இவர் முத்துவிழாவையொட்டி சிறப்பு முனைவர் (D.Litt) பட்டத்தை அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம் வழங்கிப் பெருமை பெற்றது.

இவரது வழிகாட்டுதலில் தவத்திரு மருதாசல அடிகள் இளைய பட்டமாகவும், உதகை தட்சிணாமூர்த்தி திருமடத் தலைவராகவும் செயல்பட்டுவருகிறார்.

- ஆதீனத் தகவலிதழைத் தழுவியது



# திருமுறை மாநாடு

– புதுவை ராமன் –

கனடாவில் இந்து சமயப் பேரவை ஆத்மஜோதி நா.முத்தையா அவர்களால் 1994ஆம் ஆண்டு தொடங்கப் பெற்றது. இந்துசமயப் பேரவை திருமுறைக்கு முக்கியத்துவம் அளித்து, கனடாவில் பல ஆலயங்களில் திருமுறை முற்றோதலை ஒழுங்கு செய்து வருகிறது. அதுபோன்றே வருடம் தோறும் முற்றோதல் நிறைவு விழாக்களை நடத்தி, பங்கு பற்றிய அடியார்க்குப் பரிசுகள் வழங்கிப் பாராட்டிச் சிறப்பிக்கின்றது.


சிறுவர்களையும் திருமுறைகளில் ஈடுபடுத்தும் உயர்ந்த நோக்கில் அவ்வப்போது மனனப்போட்டி, பண்ணிசைப்போட்டி, பேச்சுப்போட்டி, எழுத்துப்போட்டி போன்றவற்றை நடத்தி, இளைய சமுதாயத்தினரிடையே ஆன்மீக பக்தியுணர்வையும் சைவசமய வழிபாட்டிலும், தமிழ்மொழி கற்றறிதலிலும் ஈடுபட வைப்பதோடு, பாரதத்திலும் இந்து சமயப் பேரவை திருவாசக முற்றோதலை நடத்தியிருக்கிறது.

2000, 2001 ஆம் ஆண்டுகளில் கனடா கந்தசாமி ஆலயத்திலும், நாகபூசணி அம்பாள் ஆலயத்திலும், 2002ஆம் ஆண்டு தொடக்கம் ஐந்து வருடங்களாக ஸ்காபரோ நல்லூர் கந்தசுவாமி கோயிலிலும் திருமுறை முற்றோதலை வாரந்தோறும் நடத்தி வருகின்றது. ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் உத்தம சீடரும் தற்போதைய செயலாளருமாகிய திருமுறைச் செல்வர் திரு. சிவ. முத்துலிங்கம் அவர்களின் ஒருங்கிணைப்பால் எண்ணற்ற சைவசமயப் பணிகளைப் பேரவை செய்து வருவதை கனடா வாழ் தமிழர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள். கவிநாயகர் திரு. கந்தவனம் அவர்களை பிரதம ஆசிரியராகக் கொண்டு மூன்று மாதத்திற்கொரு முறை ஆத்மஜோதி எனும் சஞ்சிகையையும், திருமுறை சார்ந்த பல நூல்களையும் வெளியிட்டுள்ளது.

உலக அளவில் இதன் செயற்பாடுகள் தழைத்தோங் கிடவும், சைவசமயத் தமிழர்களின் ஒற்றுமையுணர்விற்கு கூடுதல் சிறப்புப் பெற்றிடும் வகையில், முதன்முதலாக கனடாவில் திருமுறை மாநாட்டை தமிழ் நாட்டின் மிகவும் புகழ்வாய்ந்த பேரூர் ஆதீன முதல்வர், கயிலைக்குருமணி சற்குரு சாந்தலிங்க இராமசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அடிகளார் அவர்கள் தலைமையில் மிகவும் சிறப்பாக 28-07-2006 வெள்ளிக்கிழமை அன்று மாலை 3:00 மணிக்கு தொடங்கி அருள்மிகு நல்லூர் முருகன் ஆலயத்திலும் மறுநாள் சனிக்கிழமை காலை 8:30 மணிமுதல் இரவு 10:00 மணிவரை கனடா கந்தசாமி ஆலயத்திலும், 30-07-2006 அன்று ரிச்மெண்ட் ஹில் விநாயகர் ஆலயத்திலும் நடத்திச் சிறப்பித்துள்ளது.

தொடக்க விழாவிற்கு தலைமை வகித்தும், அன்றைய நிகழ்ச்சிகள் அனைத்தையும் தொகுத்து வழங்கியும் சிறப்பித்தார். கவிநாயகர் கந்தவனம் அவர்கள் தொகுத்த நூலான பயன்தரவல்ல திருமுறைப் பாக்கள் என்ற நூலினை திருமதி மீனா தவரட்ணம் அவர்கள் வெளியிட்டு வைத்தார். பேரவையின் தலைவர் சைவதுரந்தரர் கந்தவனம் அர்ப்பணிப்பான பணிக்காக அனைவரின் பாராட்டுதல்களைப் பெற்றார்.

சைவ சமயப் பக்தர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், ஊடக



வியலாளர்கள், என எண்ணற்றோர் பங்குகொண்ட துவக்க விழாவின் முதல் நிகழ்வுகளாகப் பாலாபிடேகம் நடைபெற்று, திருமுறை களுடன் திருமுறை ஓதும் அடியார்கள் கோயில் வலம் வந்தனர். பௌராணிகமணி திரு சி. முத்துத்தம்பி அவர்களின் தேவார இசையுடன், தேவார இசைவாணி அருட்செல்வி கொட்வின் அவர்களின் இனிய குரலில் தமிழ்த்தாய் வாழ்த்துடனும்,





தாயகத்தில் உயிர் துறந்தோர்க்கான அமைதி வணக்கத்துடனும் மாநாடு தொடங்கப்பெற்றது.

மாநாட்டு தொடக்க வுரையை கோவை பேரூர் ஆதீன முதல்வர் வண. சாந்தலிங்க அடிகளார் அவர்கள் வழங்கினார். பொருளாளர் திரு. செ. சோமசுந்தரம் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். சிவத்திரு பாலத்திருக் குணானந்தக் குருக்கள் வாழ்த்துரை வழங்கினார். சிறப்பு விருந்தினர் சைவசித்தாந்த கலாநிதி க. கணேசலிங்கம் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவைத் தொடர்ந்து சொல்லின் செல்வர் புலவர் ஈழத்து சிவாநந்தன் அவர்கள் புரட்சி பூத்த திருமுறை என்ற தலைப்பிலும், சிவதொண்டன் நிலையத் தலைவர் திரு சின்னையா சிவநேசன் அவர்கள் சிவயோக சுவாமிகளின்



நற்சிந்தனையில் திருமுறை என்ற தலைப்பிலும் பேருரை ஆற்றினார்கள். அவர்கள் ஆற்றிய உரைகளில் ஆன்மீகச் சிந்தனை கருத்துக்களுடன் கூடிய சைவசித்தாந்த வாழ்வியல் சித்தாந்தங்கள் அனைத்தும் பல்வேறு உதாரணங்களுடனும், கலை இலக்கியச்சான்றுகளுடனும், உவமானங் களுடனும் மேற்கோள் காட்டியது, உண்மையிலேயே ஒரு வித ஆன்மீக உணர்வை வந்திருந்த அனைத்துப் பார்வையாளர்களின் மனதிலும் ஏற்படுத்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

நிறைவாக தேவாரத்துடனும் உபதலைவர் திரு கதிரித்தம்பி நவரத்தினம் அவர்களின் நன்றியுரையுடனும் முதல்நாள் விழா நிறைவடைந்தது.

- தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமுறை மாநாட்டில் வெளியிடப்பட்ட பயன் தரவல்ல திருமுறைப்பாக்கள் என்ற நூலின் முதற் பிரதியை பேரூராதீன முதல்வரிடம் இருந்து பெரியார் செல்லத்தம்பி மார்க்கண்டு அவர்கள் பெறும் பொழுது

---

சூரியனுடைய வெம்மையான கிரணங்கள் ஈரக்களிமண்ணை நன்கு இறுகச் செய்கிறது. அதே சூரியனுடைய வெப்பம் மெழுகை உருகச் செய்கிறது. சூரியனைப் போலவே கடவுளும் ஒவ்வொரு ஆத்மாவையும் அதனுடைய தன்மைக்கேற்றவாறு ஆட்கொள்கிறான். - இந்து தர்ம சாத்திரம்.





தார்மீக வள்ளல் முருகன் புத்தகசாலை அதிபர் திரு க. மகேசன் அவர்கள் திருமுறை மாநாட்டுப் போட்டிகளில் பங்குபற்றிய சிறார்களுக்குப் பரிசளித்த பின்



திருமுறை மாநாடுகளில் 12 திருமுறைகளையும் பன்னிரு பொதிகளாகக் கடடி பேரவையின் திருக்கூட்டத்தினர் வீதிவலம் வந்தனர். றிச்மண்ட் ஹில் இந்து ஆலயத்தில் திருமுறைப் பொதிகளுக்கு ஆலய அர்ச்சகர் தீபாராதனை செய்யும் பொழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது முதுசொம்களைப் பாதுகாப்போம்

பேரறிஞர் முருகவே பரமநாதன் (ஆழ்கடலான்)

முது-பழமை, சொம்-சொத்து, செல்வம், முதுசொம். முதுபொருள் முதுசொம் என்பதே தக்கபிரயோகம். சிலர் முதுசம், முதிசம் எனப் பேசுவர். முன்னோர் தேடிவைத்த சொத்து முதுசொம். நம் பாட்டி பாட்டன் காலத்துக்கு முன்னோர் தேடியது அது. பரம்பரை வழி வழியே. வாழையடி வாழையென நம்மை வந்து சேரும். காணிபூமி, தோட்டம், வயல், வீடு, வளவு - நகை யென்று பலவழியாலும் தேடிய தேட்டங்களைப் பேணிப்பாதுகாத்து அதைத் தம் சந்ததிக்கே எழுதிவைத்துப் போயினர் நம் முன்னோர். சிலர் அதைக்காத்து அடுத்த சந்ததிக்கு வைத்துப் போவர். அவற்றைப் பயன்படுத்தி வேறு தொழில் மேற்கொள்ளாமல் வாழ்வர். அந்தச் சொத்தின் சொந்தக் காரர் பலருக்கு முதுசொம் நிறைய இருக்கும். பிள்ளைகுட்டி இல்லாதவர்களின் சொத்தும் உரிமைவழி பலரைச் சேரும். அதுவும் ஒருவித முதுசொம்தான். இப்பொருள் உள்ளவர் களைப் பணக்காரர், செல்வந்தர் என்பர். இதை வைத்துக்கொண்டு தாமும் உழைத்து வாழ்வை மேற்கொள்வோர் முன்னேறுவர். வரவுக்கு மிஞ்சிய செலவு செய்வோர் ஊதாரிகள். குடும்பப்பெண் வளத்தக்க வாழ்வு உடையவளாய் இல்லறம் மேற்கொள்ள வேண்டும். குடித்துக் கூத்தாடி சூதாடி ஈடுவைத்துப் பொருளை அழிப்போர் பின்கைபிசைவர்.

உள்ளது சிதைப்போர் உளரெனப்படார்
இல்லோர் வாழ்க்கை இரவினும் இழிது

இரவு-இரத்தல். எனவே அவ்வை.

ஆன முதலின் அதிகஞ் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப் - போனதிசை
எல்லார்க்கும் கள்வனாய் ஏழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு

எனப் பாடியுள்ளார் நல்வழி 25

ஒருவன் தான் சம்பாதித்த முதற் பொருளை விட மிகுதியாகச் செலவு செய்வானாகில், மானம் கெட்டு அறிவை இழந்து, தான்போன இடங்களிலெல்லாம் எல்லோராலும் திருடனாகக் கருதப்பட்டு, ஏழுவகைப்பிறவிகளிலும் கெட்டவனாகி, தன்னிடம் அன்பு கொண்ட மனைவிக்கும் பொல்லாதவனாவான். இதனை



நன்றாக அறிவாயாக (நல்லார் - மனைவி)

ஆக, வரவுக்கு மிஞ்சிய செலவு செய்யக்கூடாதென்ற உண்மையை ஒவ்வொருவரும் கடைப்பிடித்து வாழ வேண்டும். தான் தேடாத பொருளுக்கு மாற்றுமில்லை உரையுமில்லை என்பர்.

வளவன் ஆயினும் அளவு அறிந்து அழித்து உண்வளவன். சோழன், செல்வத்திலே சோழனுக்கு நீ நிகரானவனாக நீ இருந்தாலும் பொருள்வருவாயின் அளவினை அறிந்து அதற்கேற்பச் செலவழித்து அனுபவி. அழித்தல் - செலவு செய்தன்.

வீண் விரயங்கள் - வெட்டிச்செலவுகளை எத்துணையும் தவிர்க்க வேண்டும். தானே சம்பாத்தியம் செய்யாமல் முன்னோர் சொத்தை செலவுசெய்பவர்! பின் துன்பப்படுவர்.

தேடாதழிக்கின் பாடாய் முடியும். (கொன்றை வேந்தன் 44)

ஒருவர் உடலை வருத்திப் பொருள் தேடாமல், (கையில்) இருக்கின்ற பொருளைச் செலவழித்தால் பின்னர் அ∴து அவனுக்குத் துன்பமாய் முடியும் (பாடு - துன்பம்).

நம் நாளாந்த வாழ்வின் நடைமுறைகளிலே முதுசொம் என்பது பற்றியும் அதைப் பேணுமாறு பற்றியும் மேலே கண்டோம். இ∴தே போல நம் வாழ்வியலோடு தொடர்புடைய பாரம்பரியமான முதுசொம் பற்றி இனிச்சிந்திப்போம்.

பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனிசிறந்தன. நம்மண், நாம் பேசும் மொழி, கலை, கலாச்சாரம், ஒழுகலாறு, கல்வி நற்பழக்கவழக்கம், என்பவற்றோடு நம் சமையமும் நம்முதுசொம்களாம். இவற்றையும் நாம் பேணிப் பாதுகாத்து எங்களுடைய அடுத்த சந்ததிக்குக் கொடுக்க வேண்டும். நம் பாரம்பரியங்களை பாதுகாத்தல் சாலவும் நன்றாம். இவைகளை ஓரம்போக்கின் அவை நலிந்து மெலிந்து அழிந்துபோம். ஈழத்திலேற்பட்ட குழம்பிய நிலை பலரைப் புலம்பெயர வைத்தது. அங்கே போனவர்கள் அந்நாட்டு மொழியிற்றான் கருமம் ஆற்ற வேண்டும். எனினும் தாய்மொழியைப் புறக்கணிப்பது பொருத்தமன்று. பேசாது விட்டால் அது வழக்கொழிந்துபோம். தாய்மொழி வாய்மொழியாகக்கூட இல்லாமற்போகிறது. ஹீபுறு, எபிரேயம், வடமொழி, ரோமானியம் போல வழக்கிழந்து போம். இது நமக்குப் பின்னடைவு தரும். வடஅமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, அவுத்திரேலியாவில் குடியேறியோர் ஆங்கிலத்தையே பயன்படுத்துகின்றனர். இதுவே நாகரிகம் எனக் கருதுகிறார்கள். கரீபியன், மொறிஷியஸ், தென்னாபிரிக்கா, கிழக்கிந்திய தீவுகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிரினிராட், கயானாத்தமிழர் தம் முகவரியையே இழந்துவிட்டனர். யாழ்ப்பாணத் தமிழ்பேச்சும் எழுத்தும் சுத்தமானது எனத் தமிழ் நாட்டினரே போற்றுவர். இதை இழப்பதா? இவ்வண்ணமே நம் சமயம் சைவம். இதைக் கைவிட்டு பிறசமயம் சார்வதாலும் வடஇந்தியாவில் இருந்துவரும் ஆத்மீகவாதிகள் வழிநடப்பதாலும் சைவப்பண்பாடே நலிவடைகின்றது. எனவே சைவமும் நம் முதுசொம் ஆகும். அதோடு தொடர்புடைய ஆலயங்கள் சமுதாய மையங்களாய் மிளிர வேண்டும். சைவசமயத்தோடு தொடர்புடைய சாத்திரங்கள் புராணங்கள், தோத்திரங்களைப் பேணிப்பாதுகாப்பதும் நம் கடமையாம்.

தோத்திரங்களான பன்னிரு திருமுறைகள், பதினான்கு மெய்கண்டசாத்திரங்கள், பழம்பெரும்புராணங்களான கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், திருவாதவூரடிகள் புராணம் என்பவற்றைப் படிப்பதுடன் அந்நூல்களை மறுபதிப்புச் செய்து பாதுகாக்கவும் வேண்டும். சமயகுரவரான நால்வர் (சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர்) குருபூசைகளையும், சந்தானகுரவர்களான மெய்கண்டார், அருணந்தி சிவாசாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவம் என்பவர்களது குருபூசைகளைகளையும் சைவாலயங்களிலும், மடங்களிலும், சமயமன்றங்களிலும் கொண்டாடல் இன்றியமையாததாம்.

கிறீத்தவ மதத்தை எதிர்த்துப் போராடிச் சைவத்தைப் பாதுகாத்தவர் நாவலர் பெருமான். அவரின் குரு பூசையை ஆண்டுதோறும் கொண்டாடல் வேண்டும். அவர் வெளியிட்ட பல நூல்கள் கிடைக்குமாறில்லை. பணம் படைத்தோர், அறக்கொடையாளர் இவற்றை மறுபிரசுரம் செய்ய முயல்வார்களாக. பின் வந்த அவர் முன்வந்த ஞானப்பிரகாசர் காசிவாசி செந்திநாதையர், சபாபதிநாவலர், சங்கரபண்டிதர், சபாரட்ணம், சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார், அச்சுவேலிக் குமாரசுவாமிக்குருக்கள், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, ம. க. வேற்பிள்ளை, சதாவதானி கதிரவேற்பிள்ளை, இலக்கியகலாநிதி பண்டிதமணி மு. கந்தையா, சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, விபுலானந்த அடிகளார், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை என்போரின் நூல்கள் நம் சொத்துக்களாம். இவற்றைப் பேணுவதோடு அவை அழியாமல் அச்சாகி வெளிவரவும் செய்யவேண்டும். இக்கைங்கரியங்களைச் செய்ய நமக்கு ஒரு தாபனமும் வேண்டும். எனவே நம் கருவூலங்களைப் பேணிப்



பாதுகாப்போமாக.

தொன்மை மறவேல்.

தாயக ஆலயங்களிலும், கனடா, இங்கிலாந்து, ஐரோப்பா போன்ற சீமைகளில் உள்ள ஆலயங்களிலும் நூலகங்கள் கட்டாயமாய் இருக்க வேண்டும். சிந்தித்துச் செயற்படுவோம். தொன்மை மறவோம்.

---

### குலதெய்வ வழிபாடு

நாம் இஷ்ட தெய்வங்களுக்கு வழிபாடு புரிவதோடு குல தெய்வத்திற்கும் வழிபாடு புரிய வேண்டும். குடும்பத்தில் எந்தவொரு சுபகாரியம் நடப்பதற்கு முன்பும் பின்பும் குலதெய்வத்திற்கு அபிஷேக ஆராதனை கண்டிப்பாக நடத்த வேண்டும். குல தெய்வம் நமது முன்னோர்கள் வழிவழியாகப் போற்றிவரும் குல தேவதை.

---

தேடிக் குவித்த செல்வத்தை பூதம் புதையலைக் காப்பது போலக் காப்பதால் ஒரு போதும் இன்பம் ஏற்படாது. மனிதன் துன்பத்தைச் சுமந்து கொண்டு வாழ்கின்றான் என்பது அர்த்தம். அந்தச் செல்வத்தை நல்ல வழியில் செலவிடுவதுதான் அவனுக்கு உண்மையான சுகம் தரக்கூடியது. - இந்து தர்ம சாஸ்திரம்

ஸ்காபரோ நகரில் உங்கள் சகலவிதமான தேவைகளுக்கும் அறுசுவை உணவு வழங்குபவர்கள்

**நியூ தேவி உணவகம்**

**இலங்கை, இந்திய உணவு வகைகளிற் கை தேர்ந்த நிபுணர்கள்**

தினமும் இடியப்பம் (வெள்ளை, சிவப்பு), பிட்டு, இட்லி, தோசை, வடை, வாய்ப்பன், மோதகம், பற்றிஸ் மற்றும் பல்வேறு உணவுகளை காலை 9:00 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரை சுடச்சுட பெற்றுக்கொள்ளலாம்

விரத நாட்களில் விசேட மரக்கறிகளுடன் வடை பாயாசமும் பரிமாறப்படும்

**1877 Lawrence Ave. East, Scarborough, ON**
**(Lawrence & Pharmacy)**

**Tel: 416-288-0303**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை
# திருமுறை மாநாடு - கவியரங்கம்
# 29-07-2006

## தலைப்பு: நாயன்மார்கள்
## தலைமைக் கவிதை: பேராசிரியர் முனைவர் பசுபதி

### 1. விநாயகர் துதி

முக்கட் பெருமானின் மூத்த புதல்வனே!
முக்கனிகள் கப்பிடும் மும்மதத்தோய்! - முக்காலும்
சைவநெறி பேணித் தமிழ்வளர்த்தோர் சீர்பாடக்
கைகொடுத்துக் காப்பாய் கனிந்து.

### 2. அவையடக்கம்

கற்பனையாம் மண்ணில் கவிதைப் பயிர்வளர்க்கும்
விற்பனர்உம் முன்னே விழலாக - நிற்பேனின்
புன்கவிதை ஏற்றுப் பொறுப்பீர் பிழைகள்என
என்கை குவித்தேன் இரந்து.

### 3. தலைவர் வணக்கம்

எண்சீர் ஆசிரிய விருத்தம்

நாயன்மார் புகழ்பாட நாம்வந்த இவ்வரங்கை
.. நாதனவன் முன்வந்து நடத்தவந்தான் எனுமாறு
நேயமுடன் தலைவரென நிற்குமிவர் தம்பெயரால்
.. நீள்வினையில் கட்டுண்ட பசுக்கள்தளை நீக்கவந்த
தூயபதி ஆனவனைச் சுட்டுவது பொருத்தமன்றோ?
.. தொன்மைமிகு தமிழ்மொழியில் சொல்லவொணாக் காதலுடன்
ஓயாமல் பிறர்க்குதவி, உயர்கவிதை தாம்படைக்கும்
.. உத்தமரே! உம்தலைமைக் குரித்தாகும் என்வணக்கம்.



### 4. சேக்கிழார் வணக்கம்

எண்சீர் ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

பூங்கொன்றைச் சடையார்த்துப் புலியதள்தன் மேல்போர்த்துப்
.. பொன்னாகந் தனில்அரவம் பூண்டுமழு மானும்
ஓங்குதிரி சூலமுடன் உடுக்கையும்கை ஏந்தி
.. ஒருபாகம் உமைசேர ஓடுநதி சடையில்
தாங்குமிறை தந்தபல சோதனைகள் தம்மைத்
.. தளராத இறையன்பால் தாண்டியநற் சீலர்
வீங்குபுகழ் உரைத்தகிழார் மலரடியைச் சென்னி
.. மேலேற்று யானெனது கவிதைசொலப் புகுவேன்.

### 5. சமயக் குரவர் நால்வர் துதி

கலிவெண்பா

தோடொடு தூவெண் மதியணியும் அத்தன்எனப்
பாடும்ஓர் பிள்ளை ; படும்பிணியைத் தீரஉன்னை
நாடித் துதித்திடுவார் நாவரசர் ; பித்தனெனக்
கூடியுள்ளோர் முன்பு கொடுஞ்சொல் கூறியபின்
வாடி மனம்திருந்தி வாழ்த்திடுவார் ஓர்தோழர் ;
தேடிப் பரிவாங்கச் செல்லுங்கால் உன்னடியைச்
சூடிஇசை பாடிடுவார் சேவகனாய் ஓர்தொண்டர் ;
ஆடும் சிதம்பரத்து ஐய!உனை இவ்வாறாய்ப்
பாடிப் பரவிய நால்வரிவர் தம்செயலால்
வீடும் நகரும் மண்ணுலகும் விண்ணுலகும்
ஓடிப் பரவியதே உன்புகழும் செந்தமிழின்
பீடும் அதைச் செப்புதல்எம் பேறு.

### 6. நாயன்மார் பெருமை

அறுசீர் ஆசிரிய விருத்தம்

தூய வெள்ளை விடையோனை
.. சூடும் மதியர(வு) உடையோனை
மாய வினைநோய் அறுப்போனை
..மாந்தர் செயும்பிழை பொறுப்போனைக்
காயம் மறந்த சேவையிலே
.. கண்டோர் அறுபது மூவரெனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயன் மார்தம் பெருமையைஇந்
.. நாளில் நினைவுறல் நலம்தருமே.

செவியினில் குழையணி சிவனுருவைச்
.. தெருட்டிய மனத்தினர் பவவினைநோய்
தவிர்த்தநல் தவத்தினர் தம்பணியால்
.. சடையணி பெருமனின் மனங்கவர்ந்தோர்
கவித்திறம் ஒழுகுசெந் தமிழ்த்துதியால்
.. கவின்மிகு பதினிரு திருமுறைகள்
புவியினர் பயனுற அளித்தவர்தம்
.. புகழினைப் புகன்றிடல் புண்ணியமே.

## வெண்பா

அந்தணர் வேளார் அரசர் வணிகரென
எந்தக் குலத்திருந்தும் ஈசனைத்தாம் - வந்திக்கும்
தொண்டொன்றால் ஒன்றான தூயவர்கள் சைவநெறி
கண்டனரே அன்பில் கனிந்து.

தண்ணீரால் தீவளர்த்தான் சான்றோன் நமிநந்தி
வெண்ணீற்றால் வெப்பொழித்தார் வேதியர்கோன் - கண்ணீரால்
நின்மலனின் தாள்கழுவி நித்தம் தொழுவோரால்
என்னதான் ஆகா(து) இயம்பு.

மகவரிந்தார் கண்இடந்தார் மாதேவர்க் காய்த்தீப்
புகத்துணிந்தார் கையிழந்தார் போற்றத் - தகவுடைய
நாயன்மார் செய்கைகளில் நஞ்சுண்டோன் பால்கொண்ட
நேயத்தின் எல்லைகண்டோம் நாம்.
(குறிக்கப்பட்டுள்ள நாயன்மார்: சிறுத்தொண்டர், கண்ணப்பர், புகழ்ச்சோழர், நந்தனார், திருநீலகண்டர், கலிக்கம்பர்)

சந்த விருத்தம்

பன்னுதமிழ்ப் பாடல் கோடிக் கோடி
.. பண்ணிசையி னோடு கூடிப் பாடி
.. பன்னிருநல் வேத மாக நாக மணிவோனின்



உன்னவறி யாத சீரைக் கூறி
உள்ளுருகி வாழ்ந்த மாந்தர் பாரோர்
.. ஒவ்வஇய லாத போதும் த்யாக உணர்வோடு

சொன்னமொழி காக்கும் ஈசன் நேசர்
.. தொண்டுபெரி தாகக் காணும் தாசர்
.. தொல்லைதரு வாழ்வின் ஆசை பாசம் துறந்தோர்தாள்

சென்னிதனில்பூண்டு நீர்கண் சோர
.. செஞ்சடையன் நாமம் நாவில் சேர
.. செய்வினையின் பாவம் யாவும் தீரப் பணிவோமே

மின்னுசடை மேவு நாதன் வேதம்
.. விள்ளவறி யாத போதன் பாதம்
.. மெய்யடியர் சூடிக் கீதம் ஓதி உளமுறும்

அன்புடன்நம் வாழ்வில் சோகம் போக
.. அல்லல்தரு பாசம் நாசம் ஆக
.. அம்பலவன் கோயில் ஏகித் தேக மதனாலே

என்னவகை யேனும் ஈசன் சேவை
.. என்னுமொரு மார்க்க மேநம் தேவை
.. என்றுசொலித் தாமும் தேவர் கோவைத் தினம்நாடி

இன்பமுறு நேயர் நாயன் மாரை
.. ஈசனுளம் மேவும் சீலர் பேரை
.. என்றும்நினைந் தேநம் வாழ்வில் சீரைப்
பெறுவோமே.

6. முடிப்பு
தரவு கொச்சகக் கலிப்பா

மறுவில்லா மனத்தினராய் மாதேவன் மலரடியே
உறுதுணையாய்க் கொண்டவராய் உளமார்ந்த தொண்டினிலே
இறும்பூது கொள்பவராய் ஈசபதம் தாமடைந்த
அறுபதின்மூ வர்நினைவில் அடைந்திடுவோம் அரனருளே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேன் நீக்கும் நோய்கள்

பிஞ்சு கடுக்கையை இலேசாக வறுத்து சூரணம் செய்து கால் ரூபாய் எடைத் தேனுடன் சேர்த்துச் சாப்பிட வயிற்றுக்கடுப்பு நீங்கும்.

தக்காளிப் பழத்துடன் தேன் கலந்து சாப்பிட அஜீரணம் வயிற்று உப்பிசம் நீங்கும்.

இரண்டு அவுன்ஸ் தேனை தண்ணீரில் கலந்து அருந்த வயிற்று மந்தம் நீங்கும்.

ஒரு கோப்பை கொதிக்கும் தண்ணீரில் ஒரு தேக்கரண்டி தேன் விட்டுக் கலக்கிக் குடிக்க வயிற்றுவலி நீங்கும்.

தேசிக்காய்ப் பால் தயிர் இவற்றுடன் தேன் கலந்து சாப்பிட வயிற்றுப்புண் நீங்கும்.

தேனை அருந்தினால் நன்கு ஜீரணமாகும்.

வயிற்றுப் பொருமலையும் நச்சுத் தன்மையையும் நீக்க தேன் மிக நல்லது.

காய்ந்த நெல்லிப்பழத்தின் ஓடைச் சூரணமாக்கி ஒரு பலம் எடுத்து ஒருபடி தண்ணீருடன் சேர்த்து கால்பாகமாக வற்றவைத்த பின் தேன் கலந்து 4 மணிக்கு ஒரு தடவை ஒரு அவுன்ஸ் வீதம் சாப்பிட இரத்த பேதி, சீதபேதி நீங்கும்.

பசளிக் கீரையின் இளந்தளிர்களின் சாற்றை எடுத்து அத்துடன் தேனிட்டுக் கொடுக்க குழந்தைகளின் மலச்சிக்கல் நீங்கும். தேன் இறுகிய மலத்தை இழக்கும்.

இளநீர் அல்லது எலுமிச்சம்பழச் சாற்றுடன் தேன் கலந்து சாப்பிட மூத்திர எரிச்சல், தாகம், உஷ்ணம் நீங்கும்.

மிளகை இலேசாக வறுத்துத் தூளாக்கி அதனுடன் தேன்கலந்து சாப்பிட இருமல் நீங்கும். ஒரு தேக்கரண்டி தேன் விட்டுச் சாப்பிட்டாலும் இருமல் நீங்கும்.

இஞ்சிச்சாறும் வெள்ளைப்பூண்டுச் சாறும் தேனும் சம எடை கலந்து சாப்பிட நெஞ்சுச் சளி நீங்கும்.

மூக்கின் மேற்புறமும் நாசித் துவாரங்களிலும் தேனைத் தடவ ஜலதோஷம் நீங்கும்.

தேனைத் தொண்டையில் தடவ தொண்டை வலி நீங்கும்.

இஞ்சிச்சாறு மாதுளம்பூ சாறு தேன் ஆகியன சம எடை கலந்து தினம் 3, 4 வேளை ஒரு அவுன்ஸ் வீதம் சாப்பிட ஈளை இருமல் தீரும்.



காலையில் இரண்டு தேக்கரண்டி சாப்பிட இருதய நோய் நீங்கும்.

இஞ்சியைத் துண்டுகளாக்கி தேனில் ஊறவைத்துச் சாப்பிட பித்தம் நீங்கும்.

தினசரி காலையில் அரைமூடி எலுமிச்சம் பழத்துடன் இரண்டு அவுன்ஸ் வெந்நீரில் இரண்டு தேக்கரண்டி தேன் கலந்து சாப்பிட இரத்த அழுத்த நோயைக் கட்டுப்படுத்தலாம்.

குருதி கட்டியாகுதலை தேன் இளக வைக்கும்.

இஞ்சிச்சாற்றை ஒரு ரூபாய் அளவுக்கு கையில் ஊற்றி உச்சந்தலையில் நன்றாகத் தேய்த்து ஒரு தேக்கரண்டி தேனைப்பருக பித்தவாந்தி நீங்கும். தேனை மட்டும் பருகிட சாதாரண வாந்தி நீங்கும்.

தேனைச் சூடாக்கி பல்லில் தடவ பல்வலி நீங்கும். சொத்தைப் பல்லுடையவர்கள் இஞ்சிச்சாற்றுடன் தேனைக் குழைத்து வலியுள்ள இடத்தில் தடவவும்.

மயில் இறகைச் சுட்டுச் சாம்பலாக்கி தேனில் குழைத்துச் சாப்பிட விக்கல் நீங்கும்.

புதிய மண் பாத்திரத்திலுள்ள தண்ணீருடன் தேன் கலந்து அருந்த வெய்யில் கொடுமை நீங்கும்.

தேனையும் மீன் எண்ணையையும் தினசரி பாவிக்க சோர்வு வாதம், கண ரோகம் நீங்கும்.

கருஞ் சீரகத்தைத் தேனில் அரைத்துப் பூச கர்ப்ப வலி நீங்கும்.

சம்பங்கி இலையின் ரசத்தை வடிகட்டி இரண்டு தேக்கரண்டி தேனிட்டுச் சாப்பிட சூதக நோய் நீங்கும்.

கர்ப்பவதி சந்தி மூலம் ஒரு தோலாவில் ஒரு படி நீரிட்டு கால் பாகமாக்கி வேளைக்கு அரை அவுன்ஸ் தேனுடன் கலந்து சாப்பிட இரத்தக் கொதிப்பும் நரம்புத்தளர்ச்சியும் நீங்கும்.

சிவப்பு முள்ளங்கி விதையைப் பாலுடன் காய்ச்சி அத்துடன் தேனும் கலந்து சாப்பிட தாது புஷ்டிக்கு நன்று. கருஞ் சீரகத்தைத் தூளாக்கி தேனுடன் கலந்தும் சாப்பிடலாம்.

காய்ச்சிய பசும்பாலில் பாதாம்பருப்புத்தூள் ஒரு தேக்கரண்டி தேனுடன் கலந்து காலை இரவு இருவேளை தினசரி பருகிவர மூளைப்பலம் உண்டாகி வீரிய விருத்தி ஏற்படும்.

கருஞ் சீரகத்தை தூள் செய்து தேன் கலந்து அல்லது பாலுடன் தேன் கலந்து அல்லது அரை அவுன்ஸ் தேனுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணீர் கலந்து தினசரி அதிகாலையில் சாப்பிட இரத்த விருத்தி உண்டாகும்.

தினசரி காலையிலும் மாலையிலும் பசும்பாலில் இரண்டு தேக்கரண்டி தேன் கலந்து சாப்பிட நரம்பு உறுதி ஏற்படும்.

ஒரு தேக்கரண்டி தேனுடன் இரண்டு பாதாம்பருப்பு ஒரு தோலி அளவு நல்ல வெல்லம் சேர்த்து தினசரி காலையில் சாப்பிட புஷ்டி உண்டாகும்.

தேனில் பேரீச்சம்பழத் துண்டுகளை ஊறப்போட்டு படுக்கைக்கப் போகுமுன் சாப்பிட்டு பால் அருந்துவது இனிய நல்லறத்துக்கு நன்று.

இஞ்சியைக் கீத்து கீத்தாகக் கீறி தேனில் இட்டு நன்கு ஊறிய பின் தினமும் சாப்பிட உடலூட்டம் உண்டாகும்.

குழந்தைகள் நன்றாகப் பேசத் தேனை நாக்கில் தடவி விடவும்.

சிறிது சுண்ணாம்புடன் தேன் கலந்து கட்டிகள் உள்ள இடத்தில் பற்றுப்போட கட்டிகள் பழுத்து உடையும். தேனைப் பஞ்சில் நனைத்துப்போட நாள்பட்ட புண்களும் சுகமாகும். தேனைத் தடவ காயம் ஆறும். வடுக்கள் இராது. கர்ம காயமும் குணமாகும். தீப்புண்ணும் ஆறும்.

தினசரி அதிகாலையில் வெறும் வயிற்றில் வெந்நீரில் தேன்கலந்து சாப்பிட உடல் இறுகும்.

தினசரி 6 வாழைப்பழத்துடன் பசும்பாலில் அரை விகிதமும் 2 தேக்கரண்டி தேனும் கலந்து 40 நாட்கள் சாப்பிட உடல் பருக்கும்.

---

## சத்திய சாயிபாவின் அருள்மொழிகள்

மனதில் பதிவான எண்ணங்கள் வாய்வழியே வரும்போது வாய்மை என அழைக்கப்படுகின்றது. உங்களிடம் யாராவது கேள்விகேட்டால் உண்மையைக் கூற நீங்கள் தயங்கலாம். ஆனால் உங்கள் மனதை நீங்கள் அதே கேள்வியைக் கேட்டால் உங்களால் பொய்கூற முடியாது.

உங்கள் உள்ளத் தகுதிக்கேற்பவே நீங்கள் முடிவில் பயன் பெறுவீர்கள். நீங்கள் ஏமாற்ற விரும்பும் மக்கள் உங்கள் கபட வழிகளால் ஏமாந்து போகலாம். ஆனால் ஆண்டவனை உங்களால் ஏமாற்ற முடியாது. அவர் உங்கள் உள்ளங்களில் வசிக்கிறார்.



# இந்திய திருத்தல யாத்திரை

ஆசிரியர் செ. சோமசுந்தரம்
பொருளாளர், இந்து சமயப் பேரவை

சென்ற இதழ் தொடர்ச்சி -

ஆறுபடை வீட்டுத் தலங்களில் நான்கு தலங்களைத் தரிசித்த நாம் மாணிக்கவாசகருடைய நன்மை கருதி அவரை வலிந்து ஆட்கொண்ட இடமாகிய திருப்பெருந்துறையை அடைந்தோம். 'தந்தது உன்தன்னை கொண்டது என்தன்னை' என்று அன்பில் பேரம் பேசிய இடம். பேரின்ப நிலை கிடைக்கவில்லையே என்று ஏங்கிய இடம். இங்கே எமது முக்கிய கரிசனையாகிய திருவாசகம் முற்றோதி, வரனுக்கு அபிஷேகம் செய்து, குருந்தமர அடியில் மாணிக்க வாசகரை ஆட்கொண்ட இடத்தை வணங்க உள்ளம் உருகியது. கண்களில் கண்ணீர் மல்கப் புறப்பட்டு மாணிக்கவாசகப் பெருமான் திருவாசகத்தை உகந்தருளிய திருத்தலங்களுள் பிரசித்தி பெற்ற தலமாகிய உத்தர கோசமங்கையைச் சென்றடைந்தோம்.

உத்தரகோசமங்கையில் எமது முக்கிய பணியாக திருவாசகம் முற்றோதினோம். இருள் படிந்திருந்த எமது உள்ளம் விடிந்ததுபோல் இருந்தது. உள்ளம் பூரிக்க சகஸ்ரலிங்கத்துக்கு அபிஷேகம் செய்தோம். இரவு இராமேஸ்வரம் வந்தடைந்து காலை ராமேஸ்வரத்தில் உள்ள 22 தீர்த்தங்களிலும் உள்ளத்தில் இறை உணர்ச்சியுடன் நீராடும் பேறு பெற்றோம். பயபக்தியுடன் நாம பசனையும் திருவாசகமும் ஓதி நீராடியது மறக்கமுடியாத காட்சி.

இராமேஸ்வரத்தில் மிகவும் முக்கியமான ஒரு அதிசயம் அங்கே திரிசங்கு உள்ளமை. திரிசங்கு என்ற ஒரே சங்குக்குள் மூன்று சங்குகள் இருக்கும். ஆள்கடலில் கிடைக்கும் ஓர்சங்கு இது. இந்தத் திரிசங்கைக் கொண்டு இராமேஸ்வரம் இராமநாத சுவாமிக்கு அபிஷேகம் செய்கிறார்கள்.

பின் பாம்பன் சுவாமிகளின் சமாதியை தரிசித்து பசனை செய்தோம். பாம்பன் சுவாமிகள் ஒரு முருக பக்தர். அவரது இயற்பெயர் அப்பாவு. சடாட்சர மந்திரத்தை இடைவிடாது தினமும் சொல்லிவரத் தொடங்கினார். விரைவில் அவரின் உள்ளத்தில் முருகன் நிலைகொண்டான். பின் குமரகுருநாத சுவாமியை வணங்கி தாயுமானவர் கோயிலை கண்டதும் எல்லோரும் சிறிது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் தியானம் செய்தோம். இங்கிருந்து முக்திதரும் தலமாகிய திருவண்ணாமலையில் திருவாசகம் முற்றோதும் பேறு பெற்றோம். மாணிக்க வாசகப்பெருமான் அவதரித்த இடத்தை தரிசித்த நாம் உள்ளம் உருகத் திருவாதவூரில் உள்ள மாணிக்கவாசகருக்கும் சிவபெருமானுக்கும் அபிஷேகம் செய்தோம். திருவாரூரில் உள்ள தியாகராசர் ஆலயத்தின் மூலமூர்த்திக்கு மூலட்டானேஸ்வரர் என்று பெயர். அவருக்கு இணையாக எழுந்தருளியுள்ள அம்பிகை நீலோற்பலாம்பாள். திருவாதவூரில் மணிவாசகப் பெருமான் பிறந்த காணியில் அமைக்கப்பட்ட அவரின் ஆலயத்தில் 1500 வருடங்களுக்கு முன் தோண்டிய கிணற்றைப் பார்த்து எல்லோரும் பிரமித்து நின்றோம். தியாகேஸ்வரர் அருகிலேயே சூரியபகவான் தியாகேசர் சந்நிதியை எதிர்நோக்கியவாறு நிற்கிறார்.

பின் மதுரைக்குச் சென்றோம். மதுரையில் மீனாட்சி அம்மன் திருப்பள்ளி எழுச்சிகாணும் பாக்கியம் பெற்றோம். இரவு 2 மணிக்கு திருச்செந்தூரைச் சென்றடைந்தோம். ஊமையாக இருந்த குமரகுருபரர் திருச்செந்தூரான் கருணையால் கவித்திறம்பெற்ற இடமாகும். தமிழ் முனி என்ற சிறப்புப் பெயரையும் பெற்றார். காசிவாசி என்பவரும் இவரே. இங்கே முருகப்பெருமான் சூரனை போரில் வென்று தேவர்களுக்கு காட்சியளித்த தலமாகிய திருச்செந்தூரில் குருவும் சனிபகவானும் தனித்தனியே எழுந்தருளியுள்ளனர். வேறு கிரகங்கள் அங்கு இல்லை. திருச்சீரலைவாய் எனப்படும் திருச்செந்தூரைத்தவிர்ந்த ஏனைய ஐந்து படைவீடுகளும் மலைகளில் அமைந்துள்ளன. அன்று மாலை திருச்செந்தூர் கடற்கரையில் சூரன் போரைக் கண்டுகளித்தோம். மறுநாள் முருகனை வழிபட நன்மைகள் பெருகும் படைவீடுகளுள் ஒன்றாகிய பழமுதிர்சோலையை தரிசித்துததோம்.

அங்கே இருந்து வெளியேறி கன்னியாகுமரி வந்தடைந்த நாம் கலைஞர் கருணாநிதியின் பெரும் முயற்சியால் அமைக்கப்பட்ட பிரமாண்டமான வள்ளுவர் சிலையைக் கண்டு களித்துக் கடற்பாறையில் ஏறி விவேகானந்தர் தியானமண்டபத்தை தரிசித்தோம். இயற்கைக் காட்சி உவகையூட்ட தென்காசி எனப்படும் சிவன்கோயிலை வணங்கி அங்கிருந்து திருவிலஞ்சிக் குமரனின் தரிசனம் பெற்று உலகிலேயே மிகச் சிறந்த ஸ்நான கூடமாகிய குற்றாலத்திற்கு இரவு வந்து சேர்ந்தோம். இரவு குளிர் என்றும் சிந்தியாது எல்லோரும் ஓடிப்போய் அருவியில் நீராடினோம். இங்கே




நீராடினால் உடலுக்கு உற்சாகமும் மனதிற்கு புத்துணர்ச்சியையும் தருகிறது என்றார்கள். அருவியில் பிராணவாயு அம்சங்கள் அதிகமாய் அடங்கியுள்ளதால் தான் இந்த மகிமையாம். இந்தநீர் வீழ்ச்சிக்கு தேனருவி என்றும் பெயருண்டு. குற்றாலத்தில் தேன் கூடுகள் மிகுதியாக இருப்பதாலும் இப்பெயர் வந்தது எனலாம். இயற்கை அன்னை தன் அழகையெல்லாம் திரட்டி அலங்கரித்துத் தன்னைக் காண்பவர்களையெல்லாம் மயக்குகின்றாள். செண்பக அருவி, தேன் அருவி என்ற அருவிகள் பாய்ந்து வரும் அருவியில் நீராடினோம். வற்றாத வடஅருவி என்று தலபுராணம் புகழ்கிறது. இங்கே தான் அகத்தியர் விஷ்ணுசமயம் என்றும் சைவசமயம் என்றும் வேறுபாடு செய்யாதிருங்கள் என்று கூறினார். ஞானசம்பந்தர் இயற்கை வனப்பில் மகிழ்ந்து 'வம்பார் குன்றம்' என்ற தேவாரத்தைப் பாடியுள்ளார்.


- தொடரும்


**FASHION FLORIST INC.**

**பாஷன் பூக்களஞ்சியம்**

**பாபுவின் கைவண்ணத்தில்**
**பூக்கள் மாலையாகின்றன**







**416-754-8282**

**4400 Sheppard Ave. East, Unit 5**
**Scarborough, ON.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடியார் உறவு

**கி. வா. ஜெகநாதன் (முன்னாள் கலைமகள் ஆசிரியர்)**

ஒருவனுக்கு நல்ல எண்ணங்களும் நல்ல பழக்கங்களும் வரவேண்டுமானால், அவனாக முயன்றால் எளிதில் அந்த முயற்சி கைகூடாது. நல்லவர்களோடு சேர்ந்து பழகினால் அவன் விரும்பாவிட்டாலும் அவனை அறியாமல் நல்ல பழக்கங்கள் அவனிடம் உண்டாகும். மனிதனைச் சமுதாய விலங்கு (Social Animal) என்று சொல்வார்கள். அவன் தனித்து வாழ இயலாது. பல மக்களிடையே கூடி வாழ்வதே மனிதனுடைய இயல்பு. ஒவ்வொரு வீட்டிலும் சில சில சிறப்பான பழக்கங்கள் இருக்கும். அந்த வீட்டில் பிறந்தாலும், வளர்ந்தாலும் இந்தப் பழக்கங்கள் எளிதில் வந்துவிடும்.

ஓநாய்ப் பையன் ஒருவனைப் பற்றிய செய்தி முன்பு பத்திரிகையில் மிக விசேஷமாக அடிபட்டது. அந்தப் பையனைக் காட்டிலிருந்து மீட்டு வந்து பழக்கினாலும் அவன் கையால் உணவை எடுத்து உண்ணத் தெரியாமல் வாயினாலேயே உண்டானாம். இளமை தொடங்கி வந்த பழக்கம் அது. நல்ல பழக்கங்களும் அப்படியே அமையும்.

ஆகவே தெய்வ வழிபாடு, தெய்வத்தைத் துதித்தல், தியானித்தல், பூசை செய்தல் முதலியவற்றை முயன்று பழகிக் கொள்வதைவிட அவற்றைச் செய்பவர்களோடு சேர்ந்து நெருங்கிப் பழகினால் அவை தாமே எளிதில் படிந்துவிடும். அதனால்தான் பெரியவர்கள் சாதுக்களின் சங்கம் அருளனுபவம் பெறும் வழியில் நமக்குத் துணை நிற்கும் என்று சொல்கிறார்கள்.

**'அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்**
**இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே"**

என்று தாயுமானவர் பாடுகிறார். ‘இன்ப நிலையை நான் தேடிப்போக வேண்டிய அவசியம் இல்லை. அதுவே என்னை நாடிக் கொண்டு வருவதற்கு ஒரு வழி உண்டு. அந்த வழிதான், அடியார் கூட்டத்தில் சேர்ந்து அவர்களுக்குப் பணிபுரிதல், அடியார்க்கு அடியன் ஆகும் ஆற்றலை நீ எனக்கு அருள் செய்தாயானால் அதுவே போதும். அதன் வழியே நான் இன்பநிலை பெறுவேன்’ என்று நினைத்துப் பாடியது இது.

அடியாருடன் ஒன்றி வாழ்வதன் சிறப்பை உணர்ந்தே சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டர்தொகை என்ற திருப்பதிகத்தைப் பாடியருளினார். “அடியார் நடுவுள் இருக்கின்ற அருளைப் புரியாய் பொன்னம்பலத்தெம், முடியா முதலே” என்று மணிவாசகர் இறைவனை வேண்டிக் கொண்டார்.

வீதியில் பெருங்கூட்டம் போகிறது. ஊரில் பெரிய திருவிழா. யாவரும் கோயிலை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள். ஓர் இளைஞன் தன் வீட்டு வாசலில் வந்து பார்க்கிறான். கூட்டம் கோயிலை நோக்கி மெல்ல மெல்ல நகர்ந்து கொண்டிருக்கிறது. அவனுக்குச் சோம்பலாக இருக்கிறது. மனத்துள் போகலாம் என்ற விருப்பம் சிறிது தோன்றினாலும் உடம்பு வணங்க மாட்டேன் என்கிறது. ஆனாலும் வாசலில் நின்றவன் மெல்ல வீதிக்கு வருகிறான். எப்படியோ கூட்டத்தின் நடுவில் அகப்பட்டுக் கொள்கிறான். அப்புறம் அந்தக் கூட்டமே அவனை உந்தித் தள்ளிக் கொண்டு போகிறது. எப்படியோ கோயிலை அடைந்து விடுகிறான். இது உடம்பைப் பொறுத்த வரையில் நிகழும் நிகழ்ச்சி.

இப்படியே சத்சங்கத்தில் பயில்கிறவர்களுக்கு உரையில் நல்ல பழக்கம் ஏறும். நான், நான் என்று சொல்லிக் கொண்டிருப்பவன் அடியேன் என்று சொல்லப் பழகிக் கொள்வான். எவரையும் நீ என்று சொல்லுகிறவன் நீங்கள் என்று மரியாதையாகப் பேசத்தெரிந்து கொள்வான். எந்தப் பேச்சிலும் இறைவனுடைய திருவருள் நினைப்பையும் கலந்து பேசுவான். பெரியவர்களோடு சேருவதற்குமுன், “இந்தக் காரியத்தைச் செய்து முடித்து விடுகிறாயா?” என்று கேட்டால், “ஓ! அற்புதமாகச் செய்து முடித்துவிட்டு மறுகாரியம் பார்க்கிறேன்” என்று சொல்லி மார்பு தட்டுவான். நல்லோர்களுடைய கூட்டுறவு வந்த பின்போ, “இறைவன் திருவருளைத் துணைக் கொண்டு செய்ய முயல்வேன்”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பான். செருக்கும் தருக்கும் மாறி அடக்கமும் பணிவும் உண்டாகும்.

மனத்தில் தோன்றும் விருப்பு வெறுப்புகளும் இவ்வாறே மாறுதல் அடையும். நல்லவற்றிலே நாட்டமும் பொல்லாதவற்றிலே அருவருப்பும் உண்டாகும். காரணகாரியத்தை எண்ணாமலே இந்தப் பழக்கம் உண்டாகும்.

இப்படி மனமொழி மெய்களாகிய மூன்று கரணங்களாலும் இயற்றும் செயல்களில் நல்ல பண்பு வளரும். எத்தனைக்கு எத்தனை அடியார் திருக்கூட்டத்தில் நெருங்கி நெடுங்காலம் பழகுகிறோமோ, அத்தனைக்கு அத்தனை நாமும் அவர்களைப போல் ஆகி விடுவோம். மனத்தை அடக்கி இறைவன்பால் செலுத்தும் பயிற்சி, தனியாக ஆராய்ந்து பார்த்து, நூல்களைப் படித்தால் மட்டும் வருவதில்லை. அடியார் கூட்டத்தைச் சேர்ந்து பழகுவதனால்தான் வரும். இந்த உண்மையை அபிராமிபட்டர் சொல்லுகிறார்.

"நான் அடியார்களைப் பணிந்து அவர்களைப் பின் பற்றினேன்; அதனால் பிறப்பறுக்கும் வழியைத் தெரிந்து கொண்டேன்" என்கிறார். ஆனால் அடியார்களைப் பணிந்து அவர்களோடு உறவு கொள்ளும் நிலைகூட மிக எளிது என்று சொல்ல இயலாது. பூர்வ சென்ம புண்ணிய வசத்தினால் தான் சத்சங்கம் நமக்குக் கிடைக்கும்.

"தவமும் தவமுடையார்க்கு ஆகும்"

என்பது வள்ளுவர் வாழ்மொழி. முன்னைத் தவம் இருந்தால்தான் இப்பிறப்பில் நல்லோர்களுடன் கூடும் வாய்ப்புக் கிடைக்கும். உலகத்தில் நல்லவர்களும் இருக்கிறார்கள்; கெட்டவர்களும் இருக்கிறார்கள். நாம் யாருடனும் சேர்ந்து கொள்ளலாம். எல்லோரும் நல்லவர்களுடன் சேர்ந்து கொள்ள முயன்றால் அதைத் தடுப்பார் இல்லை. ஆனால் அப்படி நடக்கிறதா? நல்லவர்கள் உலகத்தில் குறைவாகத்தான் இருக்கிறார்கள். அவர்களை நாடிச் செல்பவர்களும் குறைவாகவே இருக்கிறார்கள்.



முன்பு தவம் செய்தவர்கள் குறைவாக இருப்பதுதான் இதற்குக் காரணம்.

திருவள்ளுவர் ஒரு கருத்தைச் சொல்கிறார். தவத்தின் சிறப்பைப் புலப்படுத்துதற்காக அதைச் சொல்கிறார். முற்பிறவியில் நல்ல செயல்களைச் செய்து புண்ணியத்தை ஈட்டினவர்கள், இந்தப் பிறவியில் பொருளையும் போகத்தையும் பெறுவார்கள்; அல்லாதவர்கள் வறுமையில் ஆழ்ந்து துன்புறுவார்கள். உலகத்தில் வறியவர்களே மிகுதியாக இருக்கிறார்கள். அதற்குக் காரணம் என்ன? திருவள்ளுவர் சொல்கிறார்.

"இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்."

"உலகத்தில் பொருள் இல்லாதவர் பலராக இருப்பதற்குக் காரணம், நோன்பு நோற்றவர்கள் சிலர்' தவம் செய்யாதவர்களே பலர் என்று அவர் சொல்கிறார்.

வெறும் பொருளுக்கே இந்த நிலையென்றால், சத்சங்கத்தில் ஈடுபடுவதற்கு இன்னும் பெரிய தவம் செய்ய வேண்டும். அப்படிச் செய்பவர் பின்னும் சிலரே என்பதில் ஐயம் இல்லை.

அபிராமி பட்டர் இதை நினைவாகச் சொல்லுகிறார் ' "தாயே நான் உன் அடியார்களின் பின்னே திரிந்து அவர்களை வழிபட்டுப் பிறப்பை அறுக்கும் பொருட்டு முற்பிறவிகளில் நிறைந்த தவத்தைச் செய்து அதன் பயனை அடைந்திருக்கின்றேன்" என்கிறார்.

பின்னே திரிந்து உன் அடியாரைப்
பேணிப் பிறப்பு அறுக்க
முன்னே தவங்கள் முயன்று கொண்டேன்.

- தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடிதங்கள்

கனடா நாட்டில் ஒன்ராறியோ மாநிலத்தில் வாழும் தமிழ் மக்களின் ஆன்மீக அறிவுத் தாகத்தைத் தணிக்கும் நன்னீராக செயல்படும் 'ஆத்ம ஜோதி' மலர் படிப்பவர் உள்ளங்களில் இன்பத்தையும் மலர்ச்சியையும் ஏற்படுத்துகிறது.

அருட்செறிவும் பொருட்செறிவும் உள்ள கட்டுரைகள், செய்திகள், பிழையின்றி உயர்ந்த காகிதத்தில், நேர்த்தியான அட்டைப் படங்களுடன் வெளிவரும் இதழ் நம் இதயத்தை மென்மைப்படுத்துகிறது.

'ஆத்ம ஜோதி சுவாமிகளிடம் கேட்டவை' என்று திரு. சிவமுத்துலிங்கம் தொகுக்கும் கருத்துக்கள், மனிதர்களை மனிதர்களாக வாழ வைக்கும் கருவூலமாகும்.

'CATECHISM ON SAIVAISM' என்ற ஆங்கிலக்கட்டுரை, தமிழ் மொழியை நேர்த்தியாக கற்க முடியாத தமிழர்களுக்கும் தமிழ் அறியாத வெளி உலகத்தவர்க்கும் நம்சைவ சமயத்தைப் பற்றிய நல் அறிவை ஊட்டும், தற்காலத் தேவையை நிறைவு செய்யும் பகுதியாகும். பாராட்டுக்குரிய செயல்.

'ஆத்ம ஜோதி' இதழ் உலகத்திலுள்ள எல்லா நூலகங்களிலும் இடம்பெற்று மக்களை நல்வழிப்படுத்தவும், எதிர்கால உலகம் ஒற்றுமையுடன் வாழவும் உதவக்கூடிய நல்ல புத்தகம் ஆகும்.

'ஆத்ம ஜோதி' இதழ் வெளியீட்டிலும், விநியோகத்திலும் எத்தனை சிரமங்களையும், கேலிப்பேச்சுக்களையும் திரு. சிவ முத்துலிங்கம் அனுபவிக்கிறார் என்பதை நேரில் பார்த்தும், கேட்டும் உணர்ந்தவன் நான். தன்னலமற்ற அவரது உழைப்பு மிகவும் பாராட்டுக்குரியது. திரு. சிவ முத்துலிங்கம் அவர்கள் திருமுறை முற்றோதல்களையும், இந்திய நாட்டு சிவத்தல யாத்திரையையும் நடத்துவது மிகச் சிறப்பான செயலாகும்.

'ஆத்ம ஜோதி' இதழ் பல நூறாண்டுகள் தொய்வின்றி தொடர்ந்து மக்களுக்கு கிடைக்கவும், திரு. சிவ முத்துலிங்கம் அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து நற்பணியைத் தொடரவும் அம்மை கமலாம்பிகையையும், ஆரூர் திருமூலட்டானனையும் வணங்கி வாழ்த்துகிறேன்.

இ. செல்லையா
சித்தாந்தரத்தினம்
சென்னை



### தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடம்
### பேரூராதீனம், பேரூர், கோவை-641 010

செந்தமிழ்ச் சிவநெறி பேணும் அன்புக்குரிய சிவத்திரு கவிஞர் கந்தவனம் அவர்கட்கும் அன்பர்கட்கும்,

**அன்பால் பண்பால் அறநெறியால் உலகமெங்கும் அரிய தமிழ்**
**தன்னை வழங்கும் பெருங்கவிஞர் கந்தவனம் நம் சமயநெறி**
**பின்பற்றிடுவோர் தமிழால் டொரன்டோவில் பேணிவளர்க்கின்றார்**
**நன்மை பெருகும் பணிவளர ஞானத்தமிழால் வாழ்த்துகின்றோம்!**

**புவனம் கடந்த மெய்ப்பொருளைப் போற்றி இந்து சமயநெறி**
**சிவன்தாள் போற்றும் நெறியது எனத் திருத்தொண்டர்கள் தமைச்**
**சேர்த்து உவந்து பணிந்து திருமுறைகள் ஒருங்கே இருந்து**
**பாடுகின்ற**
**தவம்சேர்ந்திடச்செய் கந்தவனம் தண்ணார் தமிழின் பணிவாழி!**

பிரித்தானிய சைவ ஒன்றிய மேற்குலக சைவமாநாட்டிலும் பாரிசு சேக்கிழார் விழாவிலும், ஜேர்மன் வசந்த விழாவிலும் பங்குகொண்டு தங்கள் அன்பான அழைப்பினை ஏற்றுக் கனடாத்திருநாட்டின் டொரன்டோவுக்கு வந்தது மகிழ்வைத் தந்தது. தங்கள் அருமை மருகர் உருத்திரா, விசுவலிங்கம் இணையர்கள் ஆகியோர் விமானநிலையத்தில் வரவேற்று தொலைக்காட்சியில் உரை வழங்கச்செய்ததுடன் திரு. உருத்திரா - வாணி இல்லத்தில் விருந்து போற்றும் நற்பண்புடன் தங்கி உடனிருந்தீர்கள்.

அங்குள்ள திருக்கோயில்கள் நமது தொன்மைச் சமயநெறியை வளர்ப்பதற்கு வாய்ப்பாக விளங்குகின்றன. சிவநெறியை ஏற்றுப் போற்றும் தாய்மார்களும், தொண்டர்களும் சிவனடியைச் சிந்திக்கும் நோக்காகிய தீட்சையை திருமுறையில் ஏற்க அனைத்து ஏற்பாடுகளும் செய்து மொழி பெயர்தேயத்தில் முத்தமிழ் உணர்வை வளர்ப்பது பாராட்டிற்குரியது.

திருக்கோயில்களின் திருமுறை மாநாட்டை இடைவிடா முயற்சியில் சிறப்பாக நடத்தியது மேன்மைகொள் சைவநீதி உலகெங்கும் விளங்கச் செய்யும் திருப்பணியாகும். பாராட்டுக்குரிய திரு. சண்முகவடிவேல், திரு. செகநாதன், இந்து சமயப் பேரவைத் தாய்மார்கள் அன்பர்கள் ஆகியோர்க்கு நமது வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு திரும்பிய பிறகு அனைவரும் அருச்சகராகலாம் என்ற கொள்கைக்கு அரண் சேர்க்கின்ற பணிகள் திருக்கோயில் பேணும் தமிழ்ப்பணிகளை தொடர்ந்ததனால் மடல் எழுத காலம் கடந்தது. தங்கள் நற்பணி வளர வாழ்த்துகின்றோம்.

சிவத்திரு முத்துலிங்கம் நலமுற்றிருப்பார். அருமைத் தொண்டர் அவருக்கு நமது வாழ்த்தினைத் தெரிவியுங்கள். தங்கள் மடலும் இதழும் கிடைத்தன. மகிழ்ச்சி.

இத்துடன் சாந்தலிங்கப் பெருமான் அருட்திருநீறு இணைத்துள்ளோம், அணிந்தின்புறுங்கள்.

வேண்டுந்தங்களன்பு,

அன்புள்ள
(தவத்திரு சாந்தலிங்க இராமசாமியடிகள்)
பேரூராதீனம்


**S & S Engravers**

**வெற்றிக் கேடயங்கள், பெயர்க்கோர்வைகள், வாழ்த்து மடல்கள், அனைத்தும் உங்கள் தேவைககேற்ப**

**குறைந்த விலையில்**
**நிறைந்த தரத்தில்**





Name plate, Plaques, Awards, Directional Signs, Logos, Donor Recognition, Systems & Panels, Tropbies, Medals & Ribbons

**285 Progress Ave. #08**
**Scarborough, Ont.**
**Tel: 416-335-6819, Cell: 416-875-3500**
**Fax: 416-609-0272**




# தருமம்

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்



அடிமையானவன், தன்னிடத்தே தன்னாயகன் ஒப்பித்த பொருளை, அவன் கருத்தறிந்து, அக்கருத்தின் படியே, செலவு செய்தல் வேண்டுமன்றோ. அந்நாயகன் கருத்துக்கு மாறாகச் சேமித்து வைத்துக் கொண்டாலும் தன்னிச்சைப்படி செலவு செய்து அழித்தாலும், அவனாலே தண்டிக்கப்படுவானன்றோ. ஆன் மாக்களெல்லாம் சகலலோக நாயகராகிய கடவுளுக்கு மீளாவடிமைகள். தமக்குத் திருத்தொண்டு செய்து பிழைக்கும் பொருட்டு ஆன்மாக்களுக்கு இவ்வருமையாகிய மனித சரீரத்தைக் கொடுத்தருளினவர் அக்கடவுளே. மனிதர்களிடத்துள்ள பொருளெல்லாம் அவர் கொடுத்து அருளிய பொருளே. பொருள் கொடுத்தருளிய கடவுளுடைய திருவுளக்கருத்து யாது? அவர்கள் தங்களுக்கும் பிறருக்கும் சரீர சுகத்தின் பொருட்டும் ஆன்ம சுகத்தின் பொருட்டும் செலவு செய்வதும் ஆன்ம சுகத்தின் பொருட்டே என்று தெளிந்து, ஆன்ம சுகத்தையே நாடல் வேண்டும். எல்லோரும் இவ்வுண்மை யைத் தெளிய அறிந்து, தமக்குக் கடவுள் அருளிச் செய்த பொருளை அவர் திருவுளக் கருத்தின் படியே செலவு செய்து,சரீர சுகத்தையும் அது நெறியாக ஆன்ம சுகத்தையும் அடைதல் வேண்டும். அப்படிச் செய்யாது கடவுளுடைய திருவுளக் கருத்துக்கு மாறாக வீண் செலவு செய்வோரும், உலோபத்தினாலே சேமித்து வைப்போரும், அக்கடவுளாலே தண்டிக்கப்படுவர்.

தங்கள் தங்களால் இயன்ற மட்டும் வருந்திப் பொருள் சம்பாதிப்பவர்களுள்ளே சிலர், தாங்கள் உண்ணாதும், உடாதும், தங்கள் பிதாமாதாக்கள் முதலிய பந்துக்களுக்குக் கொடாதும், தருமஞ் செய்யாதும், அப்பொருளைத் தரையிலே புதைத்து வைக்கின்றார்கள். வீட்டுச் சுவரினுள்ளே வைத்துக் கட்டிடஞ் செய்கின்றார்கள். இவர்கள் இறந்தபின் இந்தப் பொருளை அநுபவிப்பவர் யாவரோ! அறியேம்.

சிலர், புத்திர பாக்கியம் இல்லாதவர்களாய் இருந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் பொருளைத் தருமத்திலே சிறிதும் செலவிடாது வைத்துவிட்டு, இறக்கின்றார்கள். அந்தப் பொருளெல்லாம் அவர்கள் பந்துக்களுக்குங் கிடையாது, வீண் வழக்குகளிலே செலவாய் விடுகின்றன.

சிலர் தங்கள் பிதா மாதா முதலிய பந்துக்கள் பசியினால் வருந்தத் தாங்களும் தங்கள் பெண்டிர் பிள்ளைகளும் உண்டுடுத்துக் களிப்புற்றிருக்கின்றார்கள். எஞ்சிய பொருளெல்லாம் அநியாய வட்டிக்குக் கொடுத்துப் பிறர் குடியைக் கெடுக்கின்றார்கள்.

சிலர் தங்களை நம்பிய பெண்டிர் பிள்ளைகளையும் கைவிட்டு, பொதுப்பெண்களை நம்பி, தங்கள் பொருள் எல்லாம் அவர்கள் பொருட்டே செலவு செய்கின்றார்கள்.

சிலர் தங்கள் தாயத்தாரோடு வழக்குத் தொடுத்துத் அவ் வழக்கிலே எல்லாம் செலவிட்டு, அவர்களையும் வறியவர்களாக்கித் தாங்களும் வறியவர்களாகின்றார்கள்.

சிலர் தங்கள் பகைவர்கண் மீது வஞ்சம் சாதிக்கத் துணிந்து, பொய் வழக்குத் தொடுத்துப் பொய்ச் சாட்சிகளுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் பரிதானங் கொடுத்தலிலே தங்கள் பொருளெல்லாஞ் செலவழிக்கின்றார்கள். பரிதானம் - கைக்கூலி.

சிலர் தாங்கள் உண்ணலும், உடுத்தலும், ஆபரணந் தரித்தலும், வாகனமேறலும், கூத்துப் பார்த்தலும், கீதங் கேட்டலுமே மனிதப் பிறப்பாலாகிய பயனென்று நினைந்து, எல்லாப் பொருளையும் அவைகளின் பொருட்டே செலவு செய்கின்றார்கள்.

சிலர் விவாகம் முதலிய சடங்குகளிலும் உத்தரக் கிரியைகளிலுமே செலவு செய்து, பெருந்திரளாகிய பொருளை யெல்லாம் இரண்டு மூன்று தினத்துள்ளே பாழாக்குகின்றார்கள். தொழில் செய்து சீவனஞ் செய்யச் சத்தியிருக்கவும் அது செய்யாத சோம்பேறிகளுக்குத் தங்கள் பொருளெல்லாம் கொடுத்துக் கொடுத்து, அவர்கள் செய்யும் வியபிசாரம் மதுபானம் சூது முதலிய பாவங்களுக்குத் தாங்களே காரணராகின்றார்கள்.

இவர்கள் யாவரும், தாங்கள் நெடுங்காலம் வருந்திச் சம்பாதித்த பொருள்களெல்லாவற்றையும், நல்லறிவும் நல்லோரிணக் கமும் இல்லாமையினாலே, இப்படி வீணிலே செலவு செய்து, பின் கடன் பட்டும் செலவு செய்கின்றார்கள். இத்தன்மையாகிய செய்கைளினாலன்றோ, இந்தத்தேசங்களில் அநேகர் ஆன்ம சுகத்தோடு சரீரசுகத்தையும் இழந்து, வறுமையுற்று வருந்து கின்றார்கள்.





## 6. வரவேற்பு

விமான நிலையத்தில் கடவைச் சீட்டுச் சோதனை முடிந்து, அப்பால் நடந்து பொதிகளையும் எடுத்துக் கொண்டு வெளிவாயிலைக் கடந்து வந்தபொழுது எமது இனத்தவர் ஒருவர் எங்களை நோக்கி வருவதைக் கண்டோம். கவர்ச்சியான முகம்... எழுச்சியான தோற்றம்...

'வணக்கம் தம்பி... உதயகுமாரோ?'

'ஓம் ஐயா. வணக்கம். வணக்கம் அம்மா.'

அம்மாவும் வணக்கத்தைச் சொல்லி 'நீங்கள் வருவியள் என்று திரு. கந்தசாமி சொன்னார்' என்றார்.

'தெரியும். அவர் இருப்பது தூரம். நான் விமான நிலையத்துக்குக் கிட்ட இருக்கிறபடியால் உங்களை வந்து கூட்டிக்கொண்டு போறது எனக்கு வசதி. எப்படி ஐயா பயணமெல்லாம்?'

'தொல்லை எதுவுமே இருக்கவில்லை.'

'நல்லது. உதைத் தாருங்கோ நான் கொண்டுவாறன்.'

பொதிகளைப் போட்டுக் கொண்டுவந்த தள்ளு வண்டிலை அவர் தள்ளியவாறு முன் செல்ல நாம் பின் தொடர்ந்தோம்.

வாகனத் தரிப்பிடப் பகுதியால் வெளிக்கிட்டு வீதிக்கு ஏறியதும் அவர் வேகமாகச் செலுத்தியவாறு பேச்சைக் கொடுத்தார்.

'நீங்கள் ஒல்லாந்துக்கு முந்தி வந்திருக்கிறியளே, ஐயா?'

'இல்லை. அமஸ்ரடாம் விமான நிலையத்தில் இறங்கி, விமானம் மாறி வேறு இடங்களுக்குச் சென்றிருக்கிறேன். விமான நிலையத்துக்கு வெளியால் வருவது இதுதான் முதல் தடவை. அழைத்த உங்களுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்.'

'நீங்கள் வர ஒப்புக்கொண்டதும் வந்ததுமெல்லாம் எங்கள் எல்லோருக்கும் பெரிய சந்தோசம். போன வருசம் சிவகுமார் என்பவரைக் கூப்பிட்டிருந்தோம். அவரை உங்களுக்குத் தெரியுமோ?'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கேள்விப்பட்டிருக்கிறேன். பழக்கமில்லை.'

'அவர் தாயகத்திலிருந்து இலண்டனுக்கு வந்த இடத்தில் எங்கள் கோயிலுக்கும் பேசக் கூப்பிட்டோம். நல்லாய்ப் பேசினார்.'

தொடர்ந்து அவர் ஸ்ரீ வரதராஜ செல்வ விநாயகர் ஆலய வளர்ச்சிபற்றிச் சொன்னார். புதுக் கோயில் அமைக்கப்பெற்று 2003ல் குடமுழுக்கு நடத்தப்பட்டதென்றும் 2004ல் முதன் முதலாகக் கொடியேற்றத்துடன் கூடிய திருவிழாக்கள் செய்யப்பட்டதென்றும் கூறினார். இடையில் மனைவியார் கேட்டார்:

'நீங்கள் இருப்பது விமான நிலையத்துக்குக் கிட்ட என்றியள். இப்போ கன தூரம் வந்துவிட்டோம்பொல இருக்கு...'

'அறுவது கிலோமீற்றர் அம்மா. இதோ வந்திட்டம். எமது செயற்குழுவில் இருக்கிற திரு. மனோராகவன் உங்களைத் தெரியும் என்று சொன்னார். அவரும் நானும் இருப்பது ஒரே நகரத்திலேதான். Lelystad என்று பெயர். நீங்கள் இன்றைக்கு மனோ வீட்டிலேதான் தங்கப்போறியள். நாளைக்கு அவர் உங்களைக் கோயிலுக்குக் கூட்டிக் கொண்டு வருவார். கோயில் இருக்கும் தென் கெல்டர் நகரம் இங்கிருந்து 120 கிலோமீற்றர். அதனால் திருவிழாக் காலத்தில் அங்கு கோயிலுக்குக் கிட்டவாகத்தான் நாங்கள் எல்லோரும் தங்கப் போகிறோம். நீங்களும் நாதஸ்வர தவில் வித்துவான்களும் நானும் எனது குடும்பமும் தங்குவதற்கு அங்கு ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்திருக்கிறோம்...'

'அப்போ மனோராகவன்?' இது மனைவியார் கேட்டது.

'அவரும் குடும்பமும் திரு. கந்தசாமி வீட்டிலே தங்கப் போகினம்.' என்றார் திரு. உதயகுமார்.

வண்டி திரு. மனோராகவன் வீட்டடியில் வந்து நின்றது. நான் பொதிகளை எடுக்கப்போக, 'விடுங்கோ ஐயா, நான் கொண்டுவாறன்' என்று சொல்லித் தானே இரண்டு பெட்டிகளையும் திரு. உதயகுமார் உள்ளே கொண்டுசெல்ல நாங்கள் பின்தொடர்ந்தோம்.

வீட்டு வாசலில் நின்று வரவேற்றார் ஓர் இளவயது மங்கை. வயது பதினாறிருக்கும் என்று சொல்லமுடியாது போனாலும் பள்ளி வயதுப் பருவத்தைக் காட்டும் பச்சிள முகம். வணக்கஞ் சொல்லி



வாருங்கோ என்ற போது அந்த முகம் புன்முறுவலாற் பொலிவுபெற்றது. 'ரதினி, மனோவின் மனைவி' என்று அந்த முகத்தை அறிமுகஞ் செய்துவைத்தார் உதயகுமார். சில நிமிடங்களில் பார்ப்பதற்குக் கோயில் வேலைகள் நிறைய இருப்பதாகச் சொல்லி எங்களிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு உதயகுமார் சென்றுவிட்டார்.

திருமதி மனோராகவன்(ரதினி) நாங்கள் தங்கப்போகும் அறையைக் காட்டினார். அறைக்குள் பெட்டிகளை வைத்து உடுப்பை மாற்றிக்கொண்டு வரவேற்புக் கூடத்துக்கு வந்தோம். எங்களை வரவேற்கப்போலும் தூங்கிக் கொண்டிருந்த மனோராகவன் தம்பதிகளின் பெண்குழந்தை விழித்துக்கொண்டு கைகால்களை அடித்துக்கொண்டிருந்தது. இவர்களுக்குக் கைக்குழந்தை ஒன்று இருக்கிற செய்தியை ஏற்கனவே திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் சொல்லிக் குழந்தைக்கென்று அன்புப் பரிசு ஒன்றும் எங்களிடம் தந்திருந்தார். குழந்தையைக் கண்டதும் நான் அறைக்குட் சென்று அந்த அன்பளிப்பை எடுத்துக்கொண்டு வந்து தாயிடங் கொடுத்தேன். எனது மனைவியார் குழந்தையுடன் கொஞ்சிக்கொண்டிருப்பதைப் பார்த்து நானும் கிட்டச்சென்று குழந்தையைப் பார்த்தேன்.

'என்ன பேர் வைத்திருக்கிறியள்?'

'உதிதா.'

'நல்ல பேர்.' மனோ வேலைக்காக்கும் ... '

'ம் ... அம்ஸ்ரடாமில் வேலை. நாலரைக்கெல்லாம் வந்திடுவார். நீங்கள் ஏதும் சாப்பிடுங்கோவன் ... '

'காலை உணவு விமானத்தில் சாப்பிட்டுவிட்டுத்தான் வந்திருக்கிறோம்.'

'அப்போ ... தேத்தண்ணி கோப்பி என்றாலும் ... '

'தேத்தண்ணியைக் குடிப்பம்.'

தேநீரை அருந்திக்கொண்டே நான் தொலைக்காட்சி பார்க்கத்தொடங்கினேன். ரதினியும் மனைவியும் சமையல் செய்யத்தொடங்கினார்கள். உதிதா உறங்கிவிட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போகவிட்டுப் புறம் சொல்லித் திரிய வேண்டாம்

**ஞானசுரபி நா. முத்தையா**

சென்ற இதழ் தொடர்ச்சி

முத்தியின்பம் பெறும் உபாயம் யாது? முருகப்பெருமானது திருவடித்துகள் பட்டால் போதும், முத்திநிலை பெற்று விடலாம். முருகப்பெருமானின் வாகனமாகி மயிலின் முதுகின்மீது அவருடைய திருவடிபடுகிறது. அதேபோல் அவரது துவசமாகிய சேவல் மீதும் அவருடைய திருவடிபாலிக்கிறார். ஆதலால் சேவலும்மயிலும் பெரும் தவம் செய்தவை என்று அகத்தியர் எடுத்துக் கூறினார்.

இதனைக் கேட்ட இளவரசர் இருவரும் சேவலும் மயிலுமாகி எம்பெருமானின் செங்கமல பாதத்தைப் பெறவேண்டும் என்று எண்ணினார்கள். அகத்தியரிடம் சுப்பிரமணிய மந்திர உபதேசம் பெற்றுக் கயிலைமலைக்குச் சென்றனர். முருகப்பெருமானைக் குறித்துப் பஞ்சாக்கினி மத்தியில் ஒற்றைக்காலில் நின்று தவஞ் செய்தனர்.

கயிலைமலையில் சிவபெருமானைச் சேவிப்பதற்கு நாராயணர் வந்தார். முருகப்பெருமானும் வந்தார். சரவணப் பொய்கையில் அவதாரஞ் செய்ய முன்னே முருகப்பெருமான் வந்தார். பிள்ளையாரப்பன் வந்தார். கயிலைமலையை அடைந்ததும் விக்னேசுவரப் பெருமான் தனது வாகனமாகிய மூஷிகத்தை வெளியில் விட்டு உள்ளே சென்றார். நாராயணர் தமது வாகனமாகிய கருடனை அதேபோல் வெளியே விட்டுச் சென்றார். பிரம்மா அன்ன வாகனத்தை விட்டுச் சென்றார். சுப்பிரமணியர் மயிலையும் சேவலையும் வெளியே நிறுத்தித்தாம் மட்டும் உள்ளே சென்றார். எல்லாத் தேவரது வாகனங்களும் கயிலையில் சுவாமி சந்நிதானத்துக்கு வெளியே நின்றன.

குட்டிக் கலகம், செய்பவர்கள் எப்போதும் எங்கும் உண்டு. கருடனும் அன்னமும் சேவலையும் மயிலையும் நோக்கி “நீங்கள் உயர்ந்த பதவியில் இருக்கிறீர்கள். உங்கள் அந்தஸ்த்துக்கு ஆசைப்பட்டு உங்களுடைய பதவியை அபகரிக்க வேண்டுமென்று



இரண்டு இராசகுமாரர்கள் தவம் செய்து கொண்டிருக்கிறார்கள்” என்று கோள்மூட்டின. ஒருவன் தமது பதவியில் வரமுயலுகிறான் என்றால் யாருக்கும் சினம் பொங்கத்தானே செய்யும்? மயிலுக்கும் சேவலுக்கும் சீற்றம் மூண்டது. தவம் செய்து கொண்டிருந்த இராசகுமாரர்களிடம் சென்று அவர்களைத் தாக்கித் தவத்தைக் கெடுத்துவிட்டன.

தவம் தடையுற்றதே என்று ராசகுமாரர்கள் மிகவும் விசனம் கொண்டனர். கருடனும் அன்னமும் சேர்ந்து சூழ்ச்சி செய்ததால்தான் சேவலும் மயிலும் தங்கள் தவத்தைக் கெடுத்தன என்று உணர்ந்த ராசகுமாரர்கள் பழிக்குப்பழி வாங்கவேண்டும் என்று எண்ணினார்கள்.

பிறிதொருநாள் சிவபெருமானைச் சேவிக்க பிரம்மா, நாராயணர், சுப்பிரமணியர், விநாயகர், ஆகியோர் கயிலைமலைக்கு வந்தனர். முன்போலவே அவர்கள் தங்கள் வாகனங்களை வெளியில் விட்டுச் சென்றனர். இச்சமயத்தில் இரு இளவரசரும் சேவல்மயில் இவற்றிடம் சென்று, “உங்களுக்குப் பலமே இல்லையாம். கருடன் சிறகை அசைத்தால் மலையே அசையுமாம். உங்கள் இருவருக்கும் அத்தகைய ஆற்றல் இல்லையாம். தனது அழகு அந்த மயிலுக்கும் சேவலுக்கும் வருமா? என்று அன்னம் வேறு பெருமை பேசுகிறது.” என்று கயிறு திரித்தார்கள்.

இழிகுணங்களுக்கும் கோளுக்கும் எப்போதுமே குறைவிருந்த தில்லைப்போலும். தாங்கள் இகழ்ச்சிக்கு ஆளாக்கப்பட்டதாக அறிந்தவுடனே மயிலும் சேவலும் வெஞ்சினம் கொண்டன. கருடனையும் அன்னத்தையும் தாக்கின. தங்களுக்கு சக்தி இல்ல என்று அவை சொன்னதாக எண்ணித் தங்களுடைய சக்தியை எல்லாம் திரட்டிக் கொண்டன. கருடனையும் அன்னத்தையும் போரில் கொன்றேவிட்டன. இச்செய்தி விஷ்ணு மூர்த்திக்கும் சதுர்முகனுக்கும் எட்டியது.

சேவகன் தவறு செய்தால் முதலாளியிடம் போய்ச் சொல்வது தானே முறை. நாராயணரும் பிரமாவும் முருகப்பெருமானிடம் சென்று சேவலும் மயிலும் செய்த சேதத்தைக் கூறினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருடனையும் அன்னத்தையும் உயிர்ப்பித்துவிட்டு, நீதி தேவனான முருகப்பெருமான் மயிலையும் சேவலையும் அழைத்து என்ன நடந்தது? என்று ராசகம்பீரமாகக் கேட்டார். வலிமை இல்லை அழகு இல்லை என்று கருடனும் அன்னமும் இகழ்ச்சியாகப் பேசினவாம். ஆதலால் அவற்றைக் கொன்று விட்டோம் என்று மயிலும் சேவலும் உண்மையை உள்ளபடி கூறின. சத்தியத்தின் சந்நிதானம் அல்லவா?

கருடனும் அன்னமும் உங்களிடம் நேராக வந்து இகழ்ந்து பேசவில்லையே? என்று வினாவினார் முருகன். இல்லை இரண்டு இராசகுமாரர்கள் எங்களிடம் தெரிவித்தார்கள் என்று மயூரமும் குக்குடமும் கூறின. முருகப் பெருமான் இளவரசர் இருவரையும் அழைத்தார். விசாகப்பெருமான் விசாரணையில் அவர்கள் நடந்தவற்றையெல்லாம் கூறினார்.

மயிலாகவும் சேவலாகவும் ஆகித் தங்களுக்கு வாகனமாகவும், கொடியாகவும் திகழ வேண்டும் என்று நாங்கள் கயிலைமயைலில் தவம்செய்து கொண்டிருந்தோம். அப்போது அன்னம் மயிலிடமும் சேவலிடமும் சென்று உங்கள் பதவியை அபகரிக்க இரண்டு ராசகுமாரர்கள் முயல்கின்றனர் என்று கூறின. அதைக்கேட்ட மயிலும் சேவலும் எங்களைத் தாக்கி எங்கள் தவத்தைக் கெடுத்துவிட்டன. இதனாலேயே நாங்கள் பழிவாங்கினோம் என்று இராசகுமாரர்கள் கூறினார்கள்.

சேவகர் செய்யும் பிழையை எசமானிடம் தான் கூறவேண்டுமேதவிர நேரடி நடவடிக்கை எடுக்கக்கூடாது என்ற நீதிமரபை நான்முகனும் திருமாலும்கூட வழுவாது கடைப்பிடித்துவர, நீங்கள் மீறியது குற்றமாகும். கருடனும் அன்னமும் தவறு செய்திருந்தாலும் அதற்காக நீங்கள் தருமயுத்த முறையை விட்டு ஏமாற்று வஞ்சனை செய்தது பொருந்தாது. அசத்தியத்தையும் சத்தியத்தால் தான் வெல்ல முடியும். பொய்க்கு என்றும் வெற்றி கிடையாது. உங்கள் குற்றத்திற்காக நீங்கள் அசுரர்களாகக் கடவது என்று சாபம் இட்டார் முருகப்பெருமான்.

மயிலும் சேவலும் செய்த குற்றத்திற்காக அவற்றைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டார். பதவிலிருந்தவர்கள்தான் நீக்கப்பட்டார்களேயன்றிப் பதவி நீக்கப்படவில்லை.



முருகப்பெருமானுக்கு வேலுமயிலும் வேலும் சேவலும் வாகனமாகவும் கொடியாகவும் அமைந்தன.

இவ்விருபதவிகளுக்காகப் பெரும்தவம் செய்த பிறகு தவறான வழியில் சென்று ஐயனின் சாபம் பெற்ற அரசகுமாரர் இருவரும் ஒன்று சேர்ந்துதான் சூரபன்மனாக வந்தார்கள்.

நாதம், விந்து என்ற இரண்டாகப் பிரித்துச் சொன்னாலும் உன்னத அனுபூதி நிலையில் இவையும் ஒன்றிவிடும். இவற்றைத் தனிப்பட்ட இருவேறு தத்துவங்களாகக் கொள்ளக்கூடாது என்பதால்தான் சூரன் ஒருவனே சேவல் மயில் இரண்டும் ஆனான் என்கிறோம்.

சூரன் பூர்வ சென்மத்தில் செய்த தவத்திற்குப் பலன் அளிக்க வேண்டும் என்று கருதினார் சுவாமி. சூரசம்காரம் செய்வதால்தான் அவன் இந்த இரு உருவங்களை அடைய முடியும் என்றே சரவணப் பொய்கையில் அவதாரம் செய்தார். அதாவது தேவர்களின் தவத்துக்கிரங்கி அவர்களுக்கு அருள்புரிவதற்காக மட்டும் முருகன் பிறக்கவில்லை. தேவர்களின் விரோதியான சூரன் முற்பிறவியில் செய்த தவத்துக் கிரங்கி அவனுக்கு அருள்செய்ய வேண்டும் என்றே அவர் உதித்தார். இவ்வாறு இருசாராரிடமும் பாரபட்சமின்றிக் கருணை புரிய எம்பிரானை அன்றி எவரால் முடியும்?

இதுகாலவரையும் எழுதப்பட்ட ஆறு கட்டுரைகளையும் எழுதுவதற்கு காரணமாக இருந்தது.

உலகநீதியில் உள்ள முதற்பாடலாகும்.

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்.
வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்
போகாத இடந்தனிலே போக வேண்டாம்
போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்
வாகாரும் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ST. THIRUNAVUKARASAR
## PART I I

Seeniappah Rajaratnam

THIRU ANGAMALAI.

In one of his verses, characteristically his own version, he gives importance to worship God with parts of the body, involving the head that should bow down to worship God, the eyes to be focused on the image of God, ears to listen to the praise of God, nose to smell the presence of our Lord, mouth to be employed in praising the Lord, heart to remember God always. Hands together to give flowers to the lord in worship, body to go round the temple, and our will be of no help at the point of our death, only God Can save us, I will sit at the feet of my God, whom I have found in my heart, Whom Lord Brahma and Vishnu failed to find.

SURRENDER

In another verse he describes of trying situation, what can trouble do, what can our sins do to us when we have absolutely surrendered to our Lord CitambalavanaR.

His verse 'Appanee ammai nee' is the simplest sweetest, and full of essence, easy for children to memorize, it is often heard in the lips of school children. The verse more often heard is ' Namarkum kudiallom. It helped the people of his time to arise awake from fear and slavery. This song is a cry for liberation .Tamil poets, writers, and politicians often quote this verse, and are considered a song for liberty.

His songs help mankind to liberate them from darkness to light, from untruth to truth from death to immortality. He said that even if he were given the wealth of this world, and that of heaven, he would respect only those who worship Lord Siva.

In another thevaram he says that for children sugar candy is the sweetest, for the youth damsels are sweet, and for the devotees of Lord Siva, God is the sweetest.

Journey to God, and God vision.

We are told that he walked to Kilas, the abode of Lord Siva and in that process his limbs such as his feet his legs and



arms were worn away. Then he began to walk on his head, and when he found that even this had limits he began to roll.

Then he had a divine vision, he saw the entire universe as God, in his two aspects Sivam and Sakthy; this is perhaps the symbolic narration of the greatest mystic experience not through conscious effort of man, but through divine grace only.

St.Thirunavukarasar was famous for singing Thandagam songs, so he was called king of Thandagam songs. His songs added new grammar to the Tamil language, and music. It gives guidance to the devotees, removes fear of death, helps to walk with God, and realise the value of human birth. Lord Siva is a lover of Tamil music and he continues to say that he never forgets to sing devotional songs in Tamil thus he opens his heart to us. His songs are ornamental to the Tamil language. His songs help mankind from the detachment of materialism to the attachment to the Kingdom of God.

St. Apputhyadigal, a great follower of St. Thirunavukarasar had said that one could be free from suffering, and no other SADANA was needed if one repeated the name Thirunavukarasar. His songs have been included in the $4^{th}$,$5^{th}$ and $6^{th}$ Thirumuri by Nambi andar namby.His motto 'En kadan paniseithu kidappathey'is being followed by millions of people all over the world till today. He healed the son of Apputhyadigal by the song 'Ontru kolamavar sinthi'.

In one of his songs he says 'O Lord of mercy, bless me so that I may always remember you in my heart without fail, even I were to be born as a worm in my next birth. In his verse 'Thundu sudaranaya Soothy kandai'' he says 'ask and you will be given' by Lord Siva, and all fasting is to purify the mind.

God is praised by many names by Devas[angels]. He is inseparable from devotees, gives wealth beyond measure, he is Mantra,tantra, and medicine; healing incurable diseases, I have wasted time without praising Lord Siva.

In another Thandagam, 'Thondalal thunaiyumillai tholalal udaumillai' he says 'Service is his help, and his garment is his skin.' Through manual or labour of love he maintained his living. He demonstrated simple living and high thinking. This has become part and parcel of Tamil culture.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HIS REGRETS

In childhood we have lived an aimless live, later we have spent our time going after women, and later with diseases, followed by walking with sticks to support thus we spend our time in regrets, O God of Thrukodeswaram. He lived for eighty one years. Today we have about hundred hymns with 1026 songs only. Like katpooram 'camphor 'burning in Sivan temples his life was spent in the service of Lord Siva.

OBSERVATION

Much have been said by Appar to Sampanther about the cruel supremacy of the Jains and the various forms of torture he had suffered in the hands of Jains monks.It is remarkable that Appar's 4000 and odd stanzas are singularly free from bitterness or hatred.

HIS COMPASSION.

Even a person with leprosy or a person who eats beef, and if he were to be a devotee of Lord Siva we will become their worshippers.

HIS MESSAGE

In his song 'PATTININTRA PAVANGAL', he says' if you want to destroy all the sins attached to you, and if you seek a price to enter the kingdom of God, if you want to cut down all the evils that surrounds you. OH mind listen without fail. ASK god of THIRUARUR, you my friends, relatives and all my support and friend in need, I will worship you and you alone and surrender OH Lord Siva the holiest one of Thiruarur.'

FINAL WORD

He says father, mother, brothers and sisters, wife and children, will go the way they came, oh men of knowledge, if you would rise up from bed, uttering the word of God NAMACHIVAYA you can live in full measure in the two world's heaven and earth.
He said 'ASK AND IT SHALL BE GIVEN'.



## இந்து சமயப் பேரவைச் செய்திகள்

## திருமுறை மாநாடு

யூலை 28, 29, 30 ஆகஸ்ட் 5ம் திகதி ஆகிய திகதிகளில் மாநாடு மிகச் சிறப்பாக நடத்தப் பட்டது. பெருந்திரளான பேராளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டார்கள். பேரூர் ஆதீன முதல்வர் சாந்தலிங்க அடிகளார் பிரதம விருந்தினராகவும் சைவ சித்தாந்த கலாநிதி கணேச லிங்கம் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். பேரவையின் தலைவர் சைவதுரந்தரர் வி. கந்தவனம் அவர்கள் தொகுத்த பயன்தரவல்ல திருமுறைப் பாக்கள் என்ற திருமுறைத் தொகுப்பு நூலும் வெளியிடப் பட்டது.

## சைவசித்தாந்த கலாநிதி கணேசலிங்கத்துக்கு நன்றி நவிலல் விழா



திருமுறை மகாநாட்டுக்கு சிறப்பு விருந்தினராக தாயகத்தில் இருந்து வருகை தந்திருந்த சைவசித்தாந்த கலாநிதி க. கணேசலிங்கம் அவர்கள் பேரவையின் நான்கு மாநாடுகளிலும் கலந்து சிறப்பித்தார்.

சைவ சித்தாந்த தத்துவத்தைப் பற்றியும், அதன் சிறப்புக்களைப் பற்றியும், அவரின் ஆணித்தரமான உரைகள் மாநாட்டிற்கு மெருகூட்டின.


பேரவையினரால் ஆகஸ்ட் 26ம் திகதி சனிக்கிழமை செ. சோமசுந்தரம் ஆசிரியரின் தலைமையில் நன்றி நவிலல் விழா நடத்தப்பட்டது. பேரறிஞர் முருகவே பரமநாதன் ஆலய பிரதமகுரு பாலதிருக்குணாணந்தக் குருக்கள், பேரவையின் உபதலைவர் க. நவரத்தினம், செயலாளர் சிவ முத்துலிங்கம் ஆகியோர் நன்றி கூறிப் பாராட்டுரைகள் வழங்கினர்.

சைவப்பெரியார் கணேசலிங்கம் அவர்கள் நீண்ட ஆயுளுடன் சுகவாழ்வு வாழ வேண்டுமென அபிசேக ஆராதனையும், பிரார்த்தனையும் நடத்தப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளின் குருபூசை



பேரவைத் தாபகர் ஆத்ம ஜோதி ஞானசுரபி முத்தையா சுவாமிகளின் 11 (பதினோராவது) குரு பூசை செப்ரெம்பர் 7ம் திகதி பேரவையினரால் அருள்மிகு நல்லூர் முருகன் ஆலயத்தில் நடத்தப்பட்டது.

அபிசேக ஆராதனைகளும், பசனை வழிபாடுகளும் இடம் பெற்றது. பெரும்திரளான பேரவையின் திருக்கூட்டத் தினர் குருபூசையில் கலந்து கொண்டனர். சுவாமிகள் மறைந்த நட்சத் திர திதியான சதய நட்சத் திரத்தில் குருபூசை நடை பெற்றது என்பது குறிப்பிடத் தக்கது.

## தாயகத்தில் சந்நிதியான் ஆச்சிரமத்தின் பணி

தாயகத்தில் போராட்ட சூழ்நிலையால் தமிழ் மக்களி டையே பசி பட்டினி தாண்டவ மாடுகின்றது. மக்கள் பணம் இருந்தாலும் உணவுப் பொருட் களை வாங்க முடியாமல் அவதி யுறுகின்றார்கள். இந்நிலையி லும் நித்திய அன்னதானப் பணி சந்நிதியான் ஆச்சிரமத்தில் தொடர்ந்து அடையாத வாயி லாக நடைபெற்றுக் கொண்டு வருகின்றது. ஆச்சிரமத்தின் நிர்வாகி மோகனதாஸ் சுவாமி களின் முயற்சி போற்றத்தக்கது.

## இந்தியச் செய்திகள்

### திருச்சியில் நடைபெற்ற நூல் வெளியீட்டில் நாவலர் பெருமானுக்கு ஈழத்து அறிஞர்களுக்கும் புகழாரம்

நூல் வெளியீட்டில் தஞ்சாவூர் தமிழ்க் கல்லூரி முதல்வர் முனைவர் கு. திருமாறன் சிறப்புரையாற்றும்பொழுது தமிழ் ஆய்வுகளிலும் சரி அறிவியல் துறைகளிலும் சரி ஈழத்து அறிஞர்கள் தென் இந்திய தமிழ் மக்களுக்கு முன்னோடிகள் எனக் குறிப்பிட்டார்.


நாவலர் தமிழகத்தில் ஆற்றிய தமிழ்ப்பணி சைவப்பணிக்கு தென்இந்திய மக்களாகிய நாம் எதைச் செய்தாலும் நாவ லருக்கு பட்ட கடனை தீர்க்க முடியாது எனப் பாரதியார் கூறியதையும் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் நாவலரின் முன்னோ ரான சுவாமி ஞானப்பிரகாசர் தமிழ்மொழி ஆய்வில் ஒரு முன்னோடி எனவும் அவரின் தமிழ் வரலாறு நூல் பற்றி தமிழர்கள் எத்தனை பேருக்குத் தெரியும் எனக் கேள்வி எழுப்பியுள்ளார். ஈழத்து அறிஞர் கதிரவேற்பிள்ளை அவர்களின் தமிழ் அகராதி நூல் பற்றியும் குறிப் பிட்டார். சுவாமி விபுலானந்தர், சி.வை தாமோதரம் பிள்ளை ஆகியோரையும் மேலும் பல ஈழத்து அறிஞர்களையும் தன் உரையில் முனைவர் அவர்கள் குறிப்பிட்டார்.



## மணி விழாக்கள்



கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்களின் மணிவிழாவை முன்னிட்டு இந்து சமயப் பேரவை 28-10-2006ல் பாராட்டு விழா ஒன்றை நடத்தவுள்ளது



சிவநெறிச் செல்வர் திரு. இ. இராமநாதனின் மணிவிழாவை எதிர்வரும் 8-10-2006ல் இலண்டனில் அவரது நண்பர்கள் கொண்டாடவுள்ளனர். இதில் கலந்து கொண்டு சிறப்பிக்க கனடாவிலிருந்து டாகடர் கதிர் துரைசிங்கம் தம்பதிகள் செல்ல வுள்ளனர்.


**Dr. Shan A. Shanmugavadivel & Associates**

**டாக்டர் அ. சண்முகவடிவேல்**

**Orthodontics Implants**

பற்களுக்கு கிளிப் போடுவதிலும் Implant பல் கட்டுவதிலும் பயிற்சி பெற்றவர்

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

**2466 Eglinton Avenue East, Unit:7**
**Scarborough, Ontario, M1K 5J8**
**Monday to Saturday**
Near Kennedy Subway (Rainbow Village Building)
**416-266-5161**

**MAIN SQUARE DENTAL OFFICE**

**7-2575 Danforth Avenue, Toronto, ON. M4C 1L5**
Mon, Tues, Wed, Thurs, Fri, Sat & Sun - Near Main Subway
Dr. Shan - (Wedn), Dr. Kalaichelvan (Thurs & Sun)
(Free consultations on alternate Sundays)
Dr. Yao San Other days)
**416-690-0121**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

**திருமுறைச்செல்வர் சிவ. முத்துலிங்கம்**

- நவராத்திரி வழிபாடு மிகமிகத் தொன்மை வாய்ந்தது. இவ்வழிபாடு வீடுதோறும் மிகப்பண்டுதொண்டே நடைபெற்று வந்துள்ளது. இவ்வழிபாடு எப்பொழுது தோன்றியதென்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை.

- மக்களின் நல்வாழ்வுக்கு வீரம், செல்வம், கல்வி மூன்றும் தேவை என்பதற்காகவே முதல் மூன்று நாட்களும் துர்க்கை, வழிபாடாகவும் அடுத்த மூனறு நாட்களும் இலக்குமி வழிபாடாகவும், கடைசி மூன்று நாட்களும் கலை மகள் (சரஸ்வதி) வழிபாடாகவும் கொண்டாடப்படுகின்றன.

- விஜயதசமி வெற்றித்திருநாள் எனப்படும். அம்பாள் மகிடாசுரனை வதைத்த திருநாள் என்பதால் வெற்றித்திருநாள் என அழைக்கப்படும்.நவராத்திரி கலையழகை வெளிப்படுத்தும் பண்டிகை ஆகையால் பொம்மைகளைக் கொலு வைக்கும் வழக்கம் தொன்றுதொட்டு வழங்கி வருகின்றது.

- மானிடர்களாகிய நாம் சௌக்கியமாக வாழவேண்டு மென்றால், தேவர்களை ஆராதிக்க வேண்டும். பித்ருக்களைத் திருப்தி செய்ய வேண்டும். தேவர்களை திருப்திப்படுத்துவதற்காக ஓமங்கள், யாகங்கள் நடத்தப்படுகின்றன. பித்ருக்களை பிரீதி செய்வதற்காக சிரார்த்தம், தர்ப்பணம் ஆகியன செய்யப்படு கின்றன.

- தெய்வகாரியங்களுக்குப் பக்தி வேண்டும். பித்ருகாரியங் களுக்கு சிரத்தை வேண்டும். சிரத்தையாகச் செய்யப்படுவதால் சிரார்த்தம் எனப்பட்டது.

- ஒருவனுக்கு சித்த சுத்தி ஏற்படுவதற்குத் தூய உணவு முக்கியம். பலநற்பண்புகள் ஏற்படுவதற்குத் தூய உணவு முக்கியம் என ஞானிகள் உபதேசித்துள்ளனர். உட்கொள்ளும் உணவுக்கும் மனநிலைக்கும் சம்பந்தம் உள்ளது எனவும் கூறியுள்ளனர்.



- சாதுவைத் தரிசிக்கும் பொழுதும் பெரியாரிடமும், குரு விடமும், குழந்தையிடமும் செல்லும்பொழுதும் வெறுங்கையுடன் செல்லக்கூடாது.

- பண்டைய தமிழன் தருமத்திற்கு பயந்து வாழ்ந்தான். இன்று அதருமம் மக்களுக்கு மத்தியில் கோலோச்சுகின்றது.

- பிறருக்குச் சேவை புரிவதிலும் பிறருக்கு அன்புப் பெருக்கைத் தடையின்றி செலுத்துவதிலும் இணையற்ற இன்பம் உள்ளது.

- இறைவனது திருவடியை இடைவிடாது சிந்திப்பதற்கு தேவார திருவாசகங்களைப் பாடும் பணி முன்னோடியாக அமைந்தது. எல்லாம்வல்ல சிவபெருமானின் திருவடியை இடைவிடாது சிந்திப்பவர்கள் சிவனடியார்கள்.

- தொண்டு செய்பவர்கள் எல்லோரும் தொண்டர்கள். ஆனாலும் பலனில் பற்றின்றிக் கருமம் ஆற்றும் கர்மயோகிகளே உண்மைத் தொண்டர்கள் எனப்படுவர்.

- தீபாவளித் திருநாளில் எமது அகஇருள் ஒழிந்து போக வேண்டும் என்றும் அகஅழுக்கு இல்லாமல் போக வேண்டுமென்றுந் தான் நம்முன்னோர் இக்கொண்டாட்டத்தைக் கொண்டாடினர்.

- யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பது சங்கத் தமிழ்க் கூற்றாகும். தமிழ்ப்பெருமக்கள் எங்கே சென்றாலும் இந்த மரபினை காத்திடும் வகையில் வாழ்வு நடத்துகின்றனர். அந்தந்த நாட்டு மக்களின் மொழி, மதம், சமுதாய உணர்வுகள் ஆகியவற்றுக்கு உரிய மதிப்பளித்து ஒற்றுமை மனப்பான் மையுடன் தமிழர்கள் இருப்பதால்தான் சென்ற இடமெல்லாம் சிறப்புற்று விளங்குகின்றனர்.

- கந்தசஷ்டி கவசத்தை இடைவிடாது பாராயணம் செய்பவர்கள் பரகதியை அடைவார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org